
Annual Subscription Rs. 6 Vol. 7. No 45 13th December 1936 Price 2 As.

# சுதேசமித்திரன்

## வாரப்பதிப்பு

## THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY


திருவனந்தபுரம் ஸ்ரீ பத்மநாப ஸ்வாமி கோவிலும் குளமும். இக் கோவிலில் இப்பொழுது ஹரிஜனங்கள் அனுமதிக்கப்பட்டு விட்டனர்.



வருட சந்தா ரூபா 6. சிலோனுக்குத் தனிப்பிரதி 14 சதம். மலாய் நாடுகளுக்கு தனிப்பிரதி 15 காசு. வெளிநாடுகளுக்கு ரூபா 1





மூன்று தலைமுறைகளாக
தாய் தன் மகளுக்கு
வுட்வர்ட்ஸ்
கிரைப் வாடர்
எப்படி குழந்தைக்கு
சுகம் தருகிறதென்று சொல்லுகிறாள்.




# WOODWARD'S
## GRIPE WATER

W. WOODWARD LTD.. LONDON. ENGLAND



இந்தியாவின் வாயில்

பம்பாய் "கேட் வே ஆப் இந்தியா"

# "இனிமேல் மாட்டவே மாட்டேன்"

—:[o]:—

"சுந்தரேசன்"

டிப்டி கலெக்டர் சீதாராம சாஸ்திரிகள் மிக்க பெயர் பெற்றவர். இந்த நாளிலல்லவா டிப்டி கலெக்டர் என்றால் அவ்வளவு மதிப்பில்லாமல் போய் விட்டது. அவர் காலத்தில் அப்படியன்று அது தாத்தா பேரனிடத்தில் "அடே பயலே பரீக்ஷையில் மட்டும் முதன்மையாக ஜயித்தால் போதாது. நீ 'டிப்டி கலெக்டர்' வேலைக்கு வரவேண்டும். பார்த்துக்கொள்" என்று சொல்லி தாத்தா பேரனை ஆசிர்வதித்துக்கொண்டிருந்த காலம். சீதாராம சாஸ்திரிகளுக்கு ஒரே பிள்ளை. அதுவும் வயதான பிறகு பிறந்தவன். ஆதலால், அவனைத் தாய்தந்தையர் மிகச் செல்வமாக வளர்த்து வந்தார்களென்று சொல்லவும் வேண்டுமோ?

*

ரங்கநாதன் பி. ஏ. பரீக்ஷையில் தேறிவிட்டான். அவன் ஒரு பரீக்ஷையிலாவது முதல் வகுப்பில் தேறவில்லையென்றாலும் ஒன்றிலாவது தேறாமலிருந்ததுமில்லை. அவன் பரீக்ஷைகளில் காப்பி அடித்து ஜயித்ததாக மட்டும் சிலர் சொல்லுவதுண்டு. புஸ்தகத்தை வைத்துக்கொண்டு பரீக்ஷையில் நீங்கள் எழுதிப்பாருங்கள். அப்பொழுது உங்களுக்குத் தெரியும் தொடை நடுக்கமென்றால் என்னவென்பது இந்தக் கஷ்டம் ரங்குவுக்கு (ரங்கநாதனின் செல்வப்பெயர்) மட்டும் தெரியவில்லையென்று நாமேன் நினைக்வேண்டும்?

பள்ளிக்கூடத்திலும் காலேஜிலும்படித்துவருகையில், விளையாட்டுகளில் கலந்து கொள்ளாமல் அவைகளில் ஈடுபடுகிறவர்களை ரங்கநாதன் கேலிசெய்வான். கிரிக்கெட் ஆடினால் 'ஸ்டைல்' இல்லையே' எனபான். ஒரு பந்தய விளையாட்டு முடிந்தது முதல் மறுபந்தய விளையாட்டுவரை "அப்படி அடித்திருக்கவேண்டும். இப்படிச் செய்திருக்கக்கூடாது. ஏன், இவர் கொஞ்சம் ஓடக்கூடாதோ?" என்றெல்லாம் ஓயாமல் தர்க்கம் பண்ணி, ஒரே சங்கதியை இருபத்தைந்தாவது தடவை அப்பொழுதுதான் புதிதாகச் சொல்வதுபோல் சொல்லுவான்.

அன்றியும் சாஸ்திரிகளின் பிள்ளை என்பதை மறந்து நவீன நாகரீகத்தில் கொஞ்சம் மூழ்கி விட்டான் ரங்கநாதன். இருந்தாலும் என்ன? அசல் அகத்து குழந்தைகளானால் 'க்ராப்' அடித்துக் கொள்ளாதே, கால் சட்டை போட்டுக் கொள்ளாதே என்று அவர்களைக் கண்டிக்கலாம். ஸந்தியாவந்தனம் செய்யாவிட்டால் பிள்ளையாருக்குத் தோப்பிக்கரணம் போடச் சொல்லலாம். ஆனால் நம் ஆத்துப் பையனே பழைய ஆசார வழி விட்டு மாறிவிட்டால் என்ன செய்வது? "என்ன குழந்தையைக் கொஞ்சம் கண்டிக்க வேண்டாமா?" என்று அவரது மனைவி சொன்னதற்கு, "இந்த நாள் போக்கு இப்படித்தான்; நாம் கட்டுப்படுசெய்வதில் பிரயோஜனம் இல்லை குழந்தைகளுக்கு வேண்டி நாம் ஆசாரமாக இருந்துவிடுவோம் தினம் வேண்டுமானால் நூறு காயத்திரி கூடுதலாகவேசெய்துவிடுவோம் இந்தப்புண்ணியத்தில் அவர்களுக்கும்கொஞ்சம்போய்ச்சேரும்" என்று மறுமொழி யளித்தார் சீதாராம சாஸ்திரியார்.

யுக்தவயதில் ரங்கநாதனுக்கும் சுகதரத்திற்கும் விவாகம் நடந்தது வேறு எதைச் சொன்னாலும் சரி, சொல்லாவிட்டாலும் சரி, அவர்கள் மிக அந்யோன்யமாக வாழ்ந்து வந்தனர் என்பதை மட்டும் கட்டாயம் சொல்ல வேண்டும்.

*

ரங்கநாதன் வேலைக்கு எங்கேயெல்லாமோ சிரமப்பட்டுப் பார்த்தான். ஆயினும் பலனில்லை. சிலதுறைகளில் உங்கள் வாசிப்புக் காணாது இங்கே உங்களை எடுத்துக்கொள்ள முடியாது என்றார்கள். சில இடங்களில் உங்கள் படிப்புத் தேவையில்லை என்றார்கள். வேறு சில இடங்களில் உங்கள் பி. ஏ. எம். ஏ பட்டங்களையெல்லாம் நாங்கள் கவனிக்க மாட்டோம். கூட்டல், கழித்தல். டிக்டேஷன் போன்ற விஷயங்களில் உங்களைப் பரீக்ஷித்துப் பார்த்துத் தேறினால் எடுத்துக்கொள்வோம் என்றார்கள். ஆனால் அந்தப் பரீக்ஷைகளில் ரங்கநாதன் போன்ற பட்டதாரிகள் கடைசியாகவே நின்றார்கள். ஓஹோ! இவ்வளவுதானா நமது பி. ஏ. எம். ஏ. படிப்பு? ஒரு விதம் பார்த்தால் செலவும் செய்து சிரமமும்பட்டு ஸம்பாதித்த இந்த வித்யாப்யாஸம் உபயோகமில்லாத குப்பைக் குவியல் என்றும்,. வேறொரு விதம் பார்த்தால் கானல் காணமென்றும் அப்பொழுதுதான அவனுக்கு விளங்கியது

என்ன செய்வதென்று ரங்கு கொஞ்சம் திகைத்தான. வெட்கமும், கோபமும் அவனை வருத்தின. ஆயினும் அவன் மனத்தளர்ச்சி அடையவில்லை. இங்கிலாந்துபோய் ஏதாவது பரீக்ஷையில் தேறி வந்தால் வேலை கிடைப்பது சுலபம் என்று அறிந்து, அவ்வாறே செய்ய நிச்சயித்தான். அதன்படியே எற்பாடு செய்யப்பட்டு இங்கிலாந்து சென்றான்.

*

எஸ். ஆர். நாத் (இங்கிலாந்துசென்றவுடன் ரங்கநாதன் குறுக்கி வைத்துக்கொண்ட பெயர்) புஸ்தகமும், கையுமாக எப்பொழுதும் அழுதுகொண்டே யிருப்பவனில்லையாகையால், அவனை அங்கே எல்லோருக்கும் தெரியும். அவனுடைய கலாசாலைத் தலைவரும், ப்ரொபஸர்களும் அவன் மேல் மிக்க ஆதரவாக இருந்தார்கள். வாராவாரம் எங்கேயாவது தெரிந்தவர்களிடையில் சிற்றுண்டி விருந்து



சென்னை கவர்னர் லார்ட் எர்ஸ்கின் குருடர் செவிடர்களுக்காகச் சென்னையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கூடத்தைச் சமீபத்தில் திறந்து வைத்தார்.

வலவூட்டும் சிறந்த டானிக்

வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்

கிருஷ்ராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,

மருந்து வியாபாரிகள், சைனபஜார் ரோட், மதராஸ்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

நடைபெறும். அவைகளுக்கு நாத் வரவில்லையானால், அவர்கள் அதைப் பெருங்குறைவாக நினைப்பார்கள். ஆனால் அவனும் அக்குறை வராமலே நடந்து வந்தான். அவர்களுடன் நெருங்கிப் பழகப் பழக அவனுக்கு அவர்களுடைய நாகரீகத்தில் முன்னிலும் அதிகப் பற்று உண்டாயிற்று. நம்மிடையில் நட்பைப் பகிரங்கமாக அதிகம் காட்டுவது வழக்கமில்லை. அதிலும் ஸ்திரீ புருஷர்களானால் பரஸ்பர நட்பை வெளிப்படையாகக் காட்டவே மாட்டார்கள். இது மூடத்தனமென்றும், அந்தரங்க நட்பிருந்தால் என் வெளிப்படையாகக் காட்டக் கூடாதென்றும், நாம் கெட்டுப் போனதெல்லாம் இம்மாதிரியான பழைய வழக்கங்களாலேதானென்றும், ஆகையால் அவைகளை நீக்கவேண்டுமென்றும் அவன் அடிக்கடிச் சொல்வதுண்டு.

ரங்கநாதனுக்கு எம். ஏ. பட்டம் சிரமமில்லாமல் கிடைத்தது. திரும்பி வந்த பிறகு வேலைக்கு ப்ரயத்னம் செய்து கஷ்டப்படக் கூடாதென்று உத்தியோகத்தை ஏற்பாடு செய்துகொண்டே இங்கிலாந்திலிருந்து புறப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் அவன் பரீக்ஷையில் தேறிய பிறகு அங்கிருந்தே பல இலாகாத் தலைமை உத்தியோகஸ்தர்களுக்கும் மனுப்போட்டான். அவர்கள் அவனுக்குக் கொடுக்கத் தயாராயிருந்த சம்பளம் ஸ்வல்பமாகவே இருந்தது.

இச்சமயத்தில் ரங்கநாதன் கற்றுவந்த கலாசாலைத் தலைவருக்கு நமது சர்க்கார், மேலதிகாரிகளிடமிருந்து தங்கள் ராஜதானிக் கலாசாலைக்கு ஒரு தலைவர் தேவையென்றும், ஐந்நூறு ரூபாய்க்கு மேல் துவக்கச் சம்பளம் கொடுக்கப்படமாட்டாதென்றும் நல்ல ஆளாகத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டுமென்றும் ஒரு கடிதம் வந்தது. யாரை நியமித்தனுப்புவதென்று தலையை லேசாகச் சொறிந்துகொண்டு கொஞ்சம் ஆலோசித்தார். "என் நாத்தை அனுப்பக்கூடாது? இந்த வேலைக்குச் சரியானவன் அவன் தான்" என்று தீர்மானித்துக்கொண்டு அவனை அழைத்து அவனிடம் கடிதத்தைக் கொடுத்து "நீ இந்த வேலையை ஒப்புக் கொள்கிறாயா?" என்று மிக்க அன்புடன் கேட்டார். அதை வாங்கி வாசித்துவிட்டு ரங்கநாதன் கொஞ்சம் திகைத்து நின்றான்.

என் திகைக்கின்றாய்? வேறு ஏதாவது வேலையில் அமர்ந்து விட்டாயா அல்லது சம்பளம் குறைவு என்று நினைக்கின்றாயா" என்றார்.

"அப்படி யொன்றுமில்லை. இதே வேலைக்கு நான் மனுக் கொடுத்திருக்கேன். அதற்குக் கலாசாலைத் தலைவர் வேலை கொடுக்கமுடியாதென்றும் 100 ரூபாயில் ஒரு அஸிஸ்டெண்டு வேலைவேண்டுமானால் கொடுக்கப்படுமென்றும் சில தினங்களுக்கு முன்னே தான் எனக்குப் பதில் வந்தது. இப்பொழுதே புதையல் கிடைத்தாற்போல 'நீங்கள் எனக்கு அந்தத் தலைவர்வேலையை நான் கேட்காமலே அளிக்கின்றீர்கள். இந்த அதிசயத்தை நினைத்துத்தான் திகைக்கின்றேன்" என்றான்.

*

ரங்கநாதன் தான் புதிதாக உத்தியோக மேற்கப் போகுமிடத்திற்கே சாமான்களை நேரே அனுப்பிவிட்டு சுந்தரத்திற்குத் தந்தியனுப்பினான். ரங்கநாதனும் பம்பாய் வந்து உடனேயே தன் ஊருக்குப் புறப்பட்டான். அது ஒருபட்டு ஊர். ஆனால் பக்கத்திலுள்ள பல ஊர்களுக்கும் அதுதான் ஸ்டேஷனானதால் கூட்டத்திற்கு மட்டும் குறைவு கிடையாது.

வரும் வழியெல்லாம் ரங்கநாதனுக்கு சுந்தரத்தின் நினைவுதான். இப்பொழுதும் சுந்தரம் பழைய மாதிரி கர்நாடக ரீதியாகவே நடப்பாளா, அல்லது நான் பல முறை வற்புறுத்தி எழுதியிருந்தபடி மேல்நாட்டு நாகரிக முறையைக்கைக்கொண்டிருப்பாளா? என்றெல்லாம் ஆலோசித்துக் கொண்டே வந்தான். கடைசியாகத் தன்மீதுள்ள அபிமானத்தால் தன் கொள்கைகளிலும் அவளுக்குப் பற்றுதல் உண்டாயிருக்க வேண்டுமென்றே தீர்மானித்துத் தன்னை எதிர்கொண்டு அழைத்துச் செல்லத் தன் காதலி ஸ்டேஷனுக்கு வந்திருப்பாள் என்று மனதை உறுதிப் படுத்திக் கொண்டான். இம்மாதிரி சுந்திரமயமான எண்ணங்களிலேயே மூழ்கி மெய்ம்மறந்தவனாயிருக்க இரவு 7-மணிக்கு ரயிலும் தன் ஊர்வந்து சேர்ந்தது. பிளாட்பாரத்தன் ஒரு கோடியில் சுந்தரம் நிற்பதைக் கண்டு ரங்கநாதன் மன மகிழ்ந்தான். மற்ற ஜனங்களெல்லாம் கொஞ்சம் நீங்கி சிறு சிறு கும்பல்களாக நின்றுகொண்டிருந்தார்கள். அவன் இருந்த கடைசி வண்டியும் அவளுக்குச்சமீபமாகநின்றது. தன்னுடைய சிறுதோல் ஸூட்கேஸைக் கையில் எடுத்துக்கொண்டு கீழே குதித்து, சரேலென்று அவள் அருகிற்சென்று "ஆ! என் கண்ணே! என் மோகினி" என்றெல்லாம் மெதுவாகச் சொல்லிக்கொண்டு அவளை அணைத்து முத்தமிடக் கைகளை நீட்டினான். ஆனால் அவள் திடுக்கிட்டு நடு நடுங்கி என்ன செய்வதென்று தெரியாமல் "யாரோ ஒரு பாதகன்..." என்று கூச்சலிட வாயைத் திறந்தாள். அவளுடைய கடை

(6-ம் பக்கம் பார்க்க)


எல்லாத் தோல் வியாதிகளையும் சீக்கிரமாய் ஆற்றும்படியானது.

நீ ரூபத்தை மாற்றும்படியான தோல் வெடிப்பினால் வருத்தப் பட்டால், உனக்கு வைத்திய சாஸ்திரம் குடிகூராவை (Cuticura) விடசீக்கிரமாய் நோய்தீர்ப்பது ஒன்றும் தரமுடியாது. இந்த மருந்து, தோல்வியாதிகளை அனேக காலமாகப் பார்த்துத் தீர்த்த வைத்தியரால் கண்டுபிடித்துச் செய்யப்பட்டது.

இந்த முறைகளைப்படித்து உபயோகிக்கவேண்டும்.

நோயிருக்கும் பாகத்தை, ராத்திரியிலும், காலையிலும், குடிகூரா சோப்புக்கட்டியால் (Cuticura Soap) வெந்நீர் வார்த்துக் கழுவி, மெதுவாய் உலரத்துடைத்து குடிகூரா தைலத்தைத் (Cuticura Ointment) தடவவேண்டும். இந்த தின உபசரணை சொறி நமைச்சலைத் தணித்து, எரிப்பை உடனே நீக்கும். புண்ணாற்றி, நோய்தீர்த்து, சொஸ்தமாக்கும் குடிகூரா (Cuticura) தோல் வெடிப்புகளினுள்ளே புகுந்துவிடும். அது கிருமிப் புழுகளை அழித்து, நோய் உண்டாக்கும் பாஷாணத்தை வெளிப்படுத்தி சீலக்கும் புண்களை ஆற்றி, தோலுக்கு சுகமான வழியை உண்டுபண்ணி முழுதலும் சொஸ்தமாக்கும். முதல் தரம் பூசும்போதே சுகத்தால் பயனுகவரும் ஆனந்தம் உனக்கு ஆச்சரியக் களிப்பை உண்டாக்கும். குடிகூரா தைலமும் (Cuticura Ointment) குடிகூரா சோப்புக்கட்டியும் (Cuticura Soap) வாங்கி இன்றைக்கே உபயோகித்துப்பார்.

Cuticura OINTMENT AND SOAP




குடிகூரா

தைலமும் சோப்புக்கட்டியும்

எந்த மருந்து கடைகளிலும், பஜார்களிலும் வாங்க அகப்படும்.



ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.



வருங்கால பலன்



புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில் அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.



பண்டிட் M. R. K. மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர் | பண்டிட் E. S. K. சுவாமி, ஜோதிஷ தத்வக்ஞோபாசி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன் கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2 ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10. ஜாதகமாவது, பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்" 70, தேவராஜமுதலி தெரு, பி.டி. மதராஸ்




## த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

ப்ருந்தாவனலோல! கோவிந்தாரவிந்தநயன (ப்ருந்)

அநுபல்லவி

ஸுந்தராங்க! த்ருதரதாங்க! ஸுஜனாரிதிமிரபதங்க! (ப்ருந்)

சரணம்

மாமவ, ஸ்ரீரமணீமணிமதனாச்ரிதமித்ர!
ராமதாஸதாஸ த்யாகராஜநுத! சுபசரித்ர! (ப்ருந்)

II

ப்ருந்தாவனலோல —ப்ருந்தாவனத்தில் ஸஞ்சரித்துப் பலவித லீலைகளைப் புரிந்தவரே!
கோவிந்த —ஆநிரை காத்தவரே!
அரவிந்தநயன —செந்தாமரைக் கண்ணனே!
ஸுந்தராங்க —திவ்ய திருமேனியையுடையவரே!
த்ருதரதாங்க —சக்ராயுததாரியே!
ஸுஜன அரிதிமிரபதங்க —ஸாது ஜனங்களின் சத்ருவான (அஞ்ஞான) இருளைப்போக்கும் சூரியனைப் போன்றவரே!
ஸ்ரீரமணீ மணிமதன —லக்ஷ்மீப் பிராட்டிக்கு மன்மதனை யொத்தவரே (அதாவது மிகவும் ப்ரியமானவரே!)
ஆச்ரிதமித்ர —சரண்புகுந்தவர்களுக்கு மித்திரரே!
ராமதாஸதாஸ த்யாகராஜநுத —ஸ்ரீராமதாஸ ஸ்வாமியின் தாஸனான த்யாகராஜனால் கொண்டாடப்பட்டவரே!
சுபசரித்ர —மங்களகரமான சரித்ரத்தையுடையவரே!
மாம் அவ —அடியேனைக் காப்பாற்றும்.

III

ஸ்ரீகிருஷ்ணபிரானைப்பற்றிய ஸ்தோத்திரங்களில் இஃதொன்று. ஸம்ஸ்க்ருத கீர்த்தனை கானமூர்த்தே, கடதேராதா, ஹரிஹரி, க்ருஷ்ணாமாகேமி, ஏகோமுநோசிதிமோ, எவரிதோரே தெல்புது, எமனி நெரகம்மி முதலியவைகளும் க்ருஷ்ணமூர்த்தியைப்பற்றியவைகளே!

கோவிந்த:—கோவிந்தன் என்றால் பசுக்களைக் காப்பவர் என்று பொருள். ஆனால் 'கோ' சப்தத்தால் குறிப்பிடப்பட்ட ஆத்மாக்களைக் காப்பாற்றுபவர் என்று ரஹஸ்யார்த்தம்.

அரவிந்தநயன:—'கண்ணும் கமலம், கமலமே கைத்தலமும்' என்ற பெரியார் வாக்கைக் கவனிக்கவும். ஸ்ரீக்ருஷ்ணமூர்த்தியினுடைய அங்கங்களனைத்திலும் கண்களே மிகவும் அழகாகப் பாராட்டப்படுவதும் அது காரணமாகவே அவருக்குக் 'கண்ணன்' என்ற திருப்பெயர் வழங்குவதும் அனைவருமறிந்ததே! 'அரவிந்தானன' என்றும் பாடம். தாமரைபோன்ற முகத்தையுடையவர் என்று பொருள்.

ஸுந்தராங்க:—மூர்த்தி பேதங்களில் கண்ணனுடைய அழகுக்கு நிகர் இல்லவே யில்லை என்று ஐயமறக் கூறலாம். ஸ்ரீலீலாசுகர், தம்முடைய அற்புதமான க்ருஷ்ண கர்ணாம்ருதத்தில் பரமாத்மாவின் திருமேனியை வர்ணிக்கப் புகுந்தபோது, ஒவ்வொரு அங்கமாக மதுரம் மதுரம் என்று கூறிக்கொண்டே வந்தவர் எல்லாம் மதுரமாயிருக்கையில் ஒன்றற்கொன்று ஏற்றத்தாழ்வு கற்பிப்பதுபோல் தனித்தனி கூறுவது தவறென்று தம்மைத் தாமே கண்டித்துக்கொள்பவர்போல், 'மதுரம் மதுரம் மதுரம் மதுரம்' என்று முடித்தார். திருமேனியின் திவ்விய ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டவர்களுக்கல்லவா அந்த அநுபவம் விளங்கும்!

ஸ்ரீரமணீமணிமதன:—இதர கீர்த்தனங்களில் ஸ்வாமிகள், 'ஸ்ரீமானினீ மனோஹர,' ஸ்ரீரம்ய சித்தாலங்காரஸ்வரூப, 'ஸ்ரீஜானகி மனோஹர' என்றவாறு ப்ரயோகித்திருப்பதைப் பார்க்க.

(6-ம் பக்கம் பார்க்க)




கீழ்க்கண்ட இடங்களில் பிராஞ்சுகள் :

பம்பாய் — ரங்கூன் — ஆண்ட்வர்ப்

## இனிமேல் மாட்டவே மாட்டேன்

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

மான நோக்கம் அவனை பஸ்மமாக்கி விடுமோ என்று தோன்றியது. அதைப்பார்த்து ரங்கநாதன் திகைத்து எது இப்படி மதிமோசம் போனேனும் என்று எண்ணி வெட்கி நெஞ்சு படபட வென்று அடிக்கக் கள்ளனைப்போல் நழுவி வெளியே சென்றார்.

இதற்குள் "கிருஷ்ணு, நீ டிரங்கு பெட்டியைத் தூக்கிக் கொள். நீங்களும் உங்களால் எடுக்கத் தகுந்த ஸாமான்களை ஆளுக் கொன்ருய் எடுத்துக்கொள்ளுங்கள். நான் பாக்கியுள்ள ஸாமான்களை யெல்லாம் எடுத்துத் தருகிறேன். எங்கே இடமிருக்கிறதோ அங்கே ஏறிக் கொள்ளுங்கள். இங்கே ரயில் அதிக நாழி நிற்காது ஜாக்கிரதை" என்ற ஏக சப்தத்துடன் ஒரே கூட்டமாக 10, 15 பேர் ஒரு வண்டியில் ஏறினர்கள். "ஜானகி, ஜானகி, எங்கேபோய் நிற்கின்ருய். இங்கேயுமா புக்கத்து மரியாதை ரயில் போய் விடப் போகிறதே, சீக்கிரம், சீக்கிரம்" என்று சங்கரய்யர் கத்த ஜானகியும் நடுக்கம் தீராதவளாகவே வண்டியில் இழுத்து ஏற்றப்பட்டாள். அப்பாடா! இன்று ரயில் தவறி விடுமென்றே நினைத்தேன் எல்லாரும் இருக்கிறீர்களா? ஸாமான்களை எண்ணிப்பாருங்கள்" என்று அய்யர் சொல்வதற்குமுன் ரயிலும் புறப்பட்டது.

ரங்கநாதன் முகத்தில் ஒளி மங்கி ஸந்தோஷம் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது ஒருவரும் அறியாமல்வீடுவந்து சேர்ந்தான். இது வரை யாருடைய நினைவாகவே இருந்ததோ அந்த சுந்தரமே திவ்யரூபத்துடன் தன் அருகில் நிற்பதைக் கூட அவன் கவனிக்கவில்லை "என்ன அப்பா உடம்பிற்கு ஒன்றும் இல்லையே? ஏன் என்னமோ மாதிரியாயிருக்கிருய்" என்று அவன் பாட்டி கேட்டதற்கு ஒன்றுமில்லை என்று மழுப்பிவிட்டான்.

ஏகாந்தத்தில் சுந்தரம் கேட்டதற்கும் 'பின்னால் ஆகட்டும், சொல்லுகிறேன். இப்பொழுது என்னிடம் ஒன்றும் கேட்காதே" என்று வெட்கித் தலை குனிந்து வருத்தத்துடன் மறுத்துவிட்டான் அப்பொழுது "அப்பா ரங்கநாதா, மன வருத்தத்தை விடு. ஆனால் இதை மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக்கொள் புதிதென்று பயங்காதே நவீன நாகரீகங்களில் நல்லவை எவை யென்பதைச் செம்மையாக அறிந்து அவைகளை மாத்திரம் கைக்கொள்ள வேண்டும் இதுவே தர்மம். இதுவே நலம் பயக்கும்" என்று அவனுடைய தாய் தந்தையர் அன்புடன் மெதுவாகச் சொல்வது போல் அவனுக்குத் தோன்றிற்று இந்த உபதேசம் முற்றும் சரியென்று அவனுக்கு இப்பொழுது பட்டது. ஆகையால் "வேறு எந்த நாகரீக முறையைக் கைப்பற்றினாலும் சரி, சுந்தரத்தினிடமிருக்கும் எனது நட்பை பகிரங்கமாகப் பொது ஸ்தலங்களில் காட்ட ஒரு நாளும் முயலேன். இனிமேல் மாட்டவே "மாட்டேன்" என்று மனதில் உடனேயே உறுதி செய்துகொண்டான்.

"ஸங்கீத அபிமானி"

சென்ற இரண்டு வருஷமாக ஸங்கீதத்துக்கென்றே நடத்தப்பட்டு வரும் ஒரு உயர்தர மாதாந்தப் பத்திரிகை

உள்நாட்டு வருடச் சந்தா ரூ. 1—8.
வெளிநாட்டு ,, ரூ. 2—0.

1935-ம் வருஷத்திய காலிகோ பைண்ட் செய்த வால்யும் விலை ரூ 3

ஸங்கீத அபிமானி ஆபீஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

ஆச்ரிதமித்ர:—மற்றொரு அவதாரத்தில் (ஸ்ரீராமாவதாரத்தில்) பகவான் 'மித்ரபாவேனஸம்ப்ராப்தம் நத்யஜேயம் மித்ர பாவத்தில் அண்டியவனைக் கைவிடேன் என்று அருளிச்செய்து, ஸுக்ரீவனுக்கும் பகைவன் தம்பியான விபீஷணுக்கும், தம்முடைய கோபத்திற்கு முதலில் பாத்ரனுகிப் பின்பு சரணமடைந்த ஸமுத்ரராஜனுக்கும் அனுக்ரஹம் செய்தது இதற்கு ஒரு அத்தாக்ஷியாகும்.

ராமதாஸதாஸத்யாகராஜநுத:—ஸ்வாமிகளுக்குப் பத்ராசல ராமதாஸ ஸ்வாமியிடத்தில் பரமபக்தி. குருபாவத்தில் பல விடங்களில் கொண்டாடுகிருர். 'ஏமிதோவ,' 'க்ஷீரசாகரசயன,' 'கலிகியுண்டே' என்ற கீர்த்தனைகளில் அவரைப்பற்றி விசேஷமாகப் பாராட்டி யிருக்கிருர்.

இவ்வாறன்றி, எனக்கு ஸங்கீத சாஸ்திர பாகத்தில் பல நுண்ணிய விஷயங்களைக் கற்பித்த பெரியாரான காலஞ்சென்ற ஸங்கீத வித்வான் கே வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், விசித்ரமாக ஒரு விஷயத்தைக் கூறுகிருர். ஸ்வாமிகள் ஸ்ரீ ராமபிரானுடைய குணங்களிலேயே அதிகம் ஈடுபட்டவரென்றும், ருசிகரமான ஒரு பக்ஷணத்தை யருந்துபவன், வேறொரு ருசியுள்ள பக்ஷணத்தையும் சுவைக்கப் புகுவதுபோல், க்ருஷ்ண லீலைகளிலும் ஈடுபடலானரென்றும், முடிவில் ஸமேலனத்தம் ஸதானுபாவ்யமான ஸ்ரீராம விக்ரஹத்திலும் ராமதாஸர்களிடத்திலும் மனந்திரும்பியவரான ரென்றும், அதனாலேயே "ராமதாஸ...த்யாகராஜனுத!" என்று பாடினரென்றும் ஸ்ரீத்யாகராஜ ஹிருதயம் 1-ம் பாகத்தில் 114-116 பக்கங்களில் விஸ்தாரமாகக் கூறியிருக்கிருர். ஸ்வாமிகளுடைய ரெளகாசரித்ரக் கீர்த்தனைகளையும் இதர கீர்த்தனைகளையும் உற்று நோக்குபவர்களுக்கு இந்தக் கூற்று அவ்வளவு பொருத்தமானதாகத் தோற்றவில்லை.

IV

### தோடி — சதுரச்ர ரூபக தாளம்

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறைப்படி 8-வது கர்த்தா ராகமாகும். கடபயாதி ஸங்க்யாவிதிக்கு ஒத்து வரும்படி இது ஹநுமதோடி என்று பெயரிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீவேங்கட மகியின் ஸம்ப்ரதாயத்தில் இதற்கு ஜனதோடி' என்று பெயர். இது கர்நாடக ஸங்கீதத்திற்கு உரிய ராக மல்ல வென்றும், ஹிந்துஸ்தானி ஸங்கீதத்திலிருந்து ஸ்வீகரிக்கப்பட்டதென்றும் (அதாவது ஔத்தரராக மென்றும்)பெரியோர்கள் கூறுகின்றனர். பஞ்சம மில்லாத பலப்ரயோகங்கள் ராகரஞ்சக முடையவைகளாயிருக்கின்றன 'கரிகா' 'மகமா' என்ற ப்ரயோகங்களில் முறையே ரிஷபமும் காந்தாரமும் அளவிலதிகப்பட்டுப் பேசுகின்றனவென்று சிலர் அபிப்ராயம்.

#### பல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ; * ஸரி | கா ; ரீஸா | ஸநிதநி | ஸா ; ; ; | ஸரிகம | கா ; ரீஸா | ஸநிதநி | ஸா ; ; ; |
| ; * ப்ருந் | தா ; வன | லோ... | ல ; ; ; | ப்ருந்... | தா ; வன | லோ... | ல ; ; ; |
| ஸரிகம | பமகாரீஸா | ஸநிதநி | ஸா ; ; ; | ஸரிகம | தபபம கரிஸா | ஸநிதநி | ஸா ; ; ; |
| ப்ருந்... | தா...வன | லோ... | ல ; ; ; | ப்ருந் | தா...வ-ன | லோ | ல ; ; ; |
| ஸரிகம | தபபமககரிஸ | ஸநிதநி | ஸா ; ; ; | தாதா | தா ; நிதபா | கா ; | பமகாரீஸா |
| ப்ருந்... | தா...வன | லோ... | ல ; ; ; | கோவிந் | தா ; அ-ர | விந் ; | தாநயன |
| ஸரிகம | தபபம கரிஸா | ஸநிதநி | ஸா ; ; ; | ஸரிகம | பதநிஸ்ரீ ; | நீதா | மா கா, ரிஸநி |
| ப்ருந்... | தா...வன | லோ... | ல ; ; ; | கோ... | விம்...தா ; | அர | விந் தா, நயன |

(ப்ருந்தாவனலோல)

#### அனுபல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ; * ஸ்ா | ஸ்ா-ஸ்நிதாபா | தாதா | நீ நீ ஸ்ாஸ்ா | தநிஸ்ா | ஸ்ா-ஸ்நிதாபா | தாதா | நீ நீஸ்ாஸ்ா |
| ; * ஸுந் | த-ரா-ங்க | த்ருத | ர தாங் க | ஸுந்... | த-ராங்-க | த்ருத | ரதாங் க |
| பதநிஸ் | ரிஸ்-நிதநிதபம | தாதா | நீ-ஸ்ரிக்ாரி | ச்ரிஸநி | ஸ்நிதா-பாதா | நிததப. | மகபமகாரிஸ |
| ஸுந்... | த்-ரா...ங்க | த்ருத | ர-தாங்-க | ஸுஜ | ஞ-ரிதி | மர | ப தங்...க |

(ப்ருந்தாவனலோல)

#### சரணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ; * மா | ; மாமாமா | மாமா | கமபா-பமகா | ; பம | கா ; ரீஸா | ஸரிகம | தபபம கரிகா |
| ; * மா | ; ம வ ஸ்ரீ | ரம | ணீ-மணி | ; மத | ஞ ; ச்ரித | ய... | ...த்ரா... |
| ; * ஸ்ா | ஸ்ா-ஸ்நிதாபா | தாதா | நீஸ்ா ; ஸ்ா | ஸ்ாஸ்ா | ஸ்ா-ஸ்நிதாபா | நிததப | பமகாரிஸா |
| ; * ரா | ம-தா-ஸ | தா | ஸத்யா ; க | ரா | ஜ-நு...த | ச... | ரீ...த்ர |
| பதநிஸ் | ரிஸ்-நிதநிதபம | தாதா | நீ-ஸ்ரிக்ாரி | ஸ்ாஸ்ா | ஸ்ா-ஸ்நித-பா | நிதநிதப | பமமககரிஸா |
| ரா... | ம-தா...ஸ | தா | ஸ-த்யா...க | ரா | ஜ-நு...த | ச... | ரி...த்ர |

(ப்ருந்தாவனலோல)

# விக்ரமசிலா சர்வகலாசாலை

## (கி. பி. 810-1119)

—:[ 0 ]:—

(ஸ்ரீ ஓ. ப. தேசிகன்)

[பாரதநாட்டின் கலாபிவிருத்தியின் சரித்திரம் மிகவும் ஆச்சரியகரமானது. வேதங்கள் தோன்றியகாலத்திலிருந்தே இது ஆரம்பமானதென்று கூறவேண்டும். தபோவனங்களில் மஹரிஷிகளும் ஆசார்யர்களும் சிஷ்யர்களுக்கு உபதேசித்து வந்தது அக்காலம். இப்பால் நாகரீகம் முதிர்ச்சியடைந்தபின் பற்பல கல்லூரிகளும் சர்வகலாசாலைகளும் ஆரம்பமாயின. அநேக ஆண்டுகளுக்குமுன் விக்ரமசிலாவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சர்வகலாசாலையைப்பற்றிய விவரங்களையும், அது எத்தகைய மேம்பாடடைந்து அதன் கீர்த்தி கடல்களுக்கப்பாலுள்ள புறநாடுகளிலும் பரவியிருந்ததென்பதையும், பின்னிட்டு அது அழிந்துபோன துக்ககரமான வரலாறுகளையும் இக்கட்டுரையில் காணலாம்.]

வேதங்கள் தோன்றிய பன்னெடுங்காலத்திலிருந்தே பாரத நாட்டின் கலாபிவிருத்தியின் சரித்திரம் ஆரம்பமாவதாகக் கூறவேண்டும். வேத நூல்களை ஓதுவதும் ஓதுவிப்பதும் தொடங்கிய அந்நாள் முதலாக இன்றுவரை இந்நாட்டுக் கல்வி முறையின் போக்கில் எத்தனையோ விதமான மாறுதல்கள் காணப்படுகின்றனவாயினும் அதன் வளர்ச்சியானது சிறிதேனும் குறைவுபடாமலும் தொடர்ச்சியாகவும் இருந்துவருகிறது. ஆதியில் கானகங்களில் வதிந்து இயற்கையின் இன்பக் காட்சிகளுக்கிடையே தமது ஆச்சிரமங்களையமைத்துக் கொண்ட ஆசாரியர்களும் ரிஷி சிரேஷ்டர்களும் தம்மை யாவலுடன் நாடிவந்த வித்தியார்த்திகளுக்கு வேதாப்பியாஸம் செய்து வைத்ததுடன் தமது முதிர்ந்த அறிவினாலும், அநுபவ ஞானத்தாலும் கண்டு தெரிந்த உண்மைகளையும் வாய்மொழியாகவே அவர்களுக்கு உபதேசம் செய்து வந்தனர். ஆசாரியர்களின் தபோவனங்களையே தமது வாசஸ்தலமாகக்கொண்டு பிரம்மசாரிகளும், வித்தியார்த்திகளும் தமது வித்தியாப்பியாஸ காலம் பூர்த்தியான பிறகு குருதக்ஷிணை செலுத்தி ஆசாரியரின் அநுமதி பெற்று, அதன் பின் கிரஹஸ்த வாழ்க்கையை மேற்கொள்ளுவார்கள்.

இப்பால் நாகரீகம் முதிர்ச்சி அடைய அடைய நகரங்கள் பல தோன்றி, மக்களின் பல்வகைப்பட்ட அறிவு சக்திகளையும் பயனுறச் செலுத்தத்தக்க ஸ்தலங்களாக அமையவும், நாடெங்கும் ஆங்காங்கு பற்பல கல்லூரிகளும் பெரிய பெரிய வித்யா ஸ்தாபனங்களும் ஏற்பட்டு மக்களுக்கு அறிவுச் சுடர் கொளுத்திவாத் தலைப்பட்டன. நாளடைவில் பராக்கிரமமும் பரந்த நோக்கமும் வாய்ந்த பேரரசர்கள் இத்தகைய கல்விக் கழகங்கள் பலவற்றை நிறுவுவதற்கு வேண்டிய பொன்னும் பொருளும் ஏராளமாக அளித்து ஜனங்களிடையே கல்வியைப் பரப்புவதற்குப் பல்காலும் துணைபுரிந்து வருவாராயினர். இம்மன்னர்கள் இடைவிடாது அளித்துவந்த போஷாதரவின் காரணமாக இவ்வித்தியா நிலயங்களில் சில, நாளுக்குநாள் மேம்பாடெய்தி தற்காலத்திய ஸர்வகலாசாலைகள் எவ்விதமான கடமைகளை நிறைவேற்றி வருகின்றனவோ, அத்தகைய அநுவல்களனைத்தையும் மேற்கொள்ளுவது ஸாத்யமாயிற்று. அவைகளின் கீர்த்தி இந்நாட்டில் மட்டுமேயல்லாது, கடல்களுக்கப்பாலுள்ள புறநாடுகளிலும் பரவியது.

### பாரத நாட்டின் பண்டை ஸர்வகலாசாலைகள்

பாரத நாட்டிற்கு இத்தகைய மகத்தான கீர்த்தியை தேடிக் கொடுப்பதற்குக் காரணமாக அமைந்த பண்டைக் காலத்திய கலாசாலைகளில் இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்குமுன்: பாஞ்சால மாகாணத்தில் 'தக்ஷசிலா' வென்ற ஸ்தலத்திலும், அதற்குச் சில நூற்றுண்டுகளுக்குப் பின் மகத ராஜ்யத்தில் "நாளந்தா, விக்ரமசிலா, உத்தண்டபுரி" ஆகிய க்ஷேத்திரங்களிலும் தெறகே கிருஷ்ணாநதி தீரத்தில் "ஸ்ரீ தன்யகடக" மென்ற இடத்திலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சர்வகலாசாலைகளே மற்றவைகளைக் காட்டிலும் குறிப்பிடத் தகுந்தவைகளாம்.

இந்த சர்வகலாசாலைகளைச் சார்ந்த பிரம்மாண்டமான கட்டிடங்களில் ஆயிரக்கணக்கான மாணவர்களும், நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும் ஏககாலத்தில் வசிப்பதற்கு இடவசதியும், அவர்களனைவருக்கும் இலவச போஜன வசதியும் செய்யப்பட்டிருந்தன. உதாரணமாக நாளந்தா ஸர்வகலாசாலையில்மட்டும் 10000 மாணவர்கள் உலக வாழ்க்கைக்குரியனவும், பௌத்த மத சம்பந்தமானதுமான பல் வேறு கல்வித் துறைகளில் அறிவு விளக்கம் பெற்று வந்தார்கள் என்று பிரசித்தி பெற்ற சீன யாத்ரீகர்களான யுவான் சுவாங்கும், ஐட்சிங் என்ற மற்றொருவரும் எழுதிய விவரங்களால் தெரிய வருகிறது. மேற்கூறிய இருவரும் பல வருடகாலம் இப்பெரும் ஸர்வ கலாசாலையில் வித்தியாப்பியாஸம் பெற்று கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைந்தவர்களாக விளங்கினார்கள். இக்கலாசாலைகளில் ஆயுள்வேத வைத்தியம் முதல்வான சாஸ்திரம் ஈறாக, வியாகரணம் ஹேது வித்யை அபிதர்மகோசம் முதலிய நூற்கள் பலவும் கற்பிக்கப்பட்டன. ஆனால் அக்காலத்தில் கல்வியின் உன்னதமான இலட்சியங்கள் யாவும் மதச் சார்புடையனவாக நின்றனவாதலின், அவ்வக்காலத்தில் எந்தெந்த மதங்கள் அரசாங்க ஆதரவு பெற்று மேம்பாடெய்தி விளங்கினவோ, அவைகளையொட்டிய விசாரத்திற்கே மற்றவைகளினும் உயர்ந்த ஸ்தானம் அளிக்கப் பெற்றிருந்தன. இவ்வாறாகத் தக்ஷசிலா பிராம்மணியக் கல்விக்கும், நாளந்தா, விக்ரமசிலா, உத்தண்டபுரி ஸர்வகலாசாலைகள் பௌத்த தர்மத்தையொட்டிய கல்விக்கும் ஸ்ரீதன்யகடகம் வைதீக, பௌதத சமயக் கல்விகளுக்கும் இருப்பிடமாகக் கீர்த்தி வாய்ந்திருந்தன. முற்கூறியவற்றினுள் தக்ஷசிலா, நாளந்தா சர்வகலாசாலைகளைப் பற்றிய விவரங்கள் தமிழ்ப் பத்திரிகைகளில் ஏற்கனவே வெளி வந்துள்ளன. தக்ஷசிலா, நாளந்தா வித்யா பீடங்களில் சிற்பக் கலைகளுடன் தநுர்வேதம் போன்ற அரசர்களுக்குரிய கலைகளும் கூடக் கற்பிக்கப்பட்டன.



சென்ற 28-ந் தேதி கல்கத்தாவுக்குச் சமீபமாயுள்ள சாகாகஞ் என்றுமிடத்தில் வங்காள கவர்னர் டன்லப் ரப்பர் கம்பெனியின் புதிய தொழிற் சாலையைத் திறந்துவைத்தார். அதன்பின் அவர் சில டயர்களைப் பார்வையிட்டபோது எடுத்த படம்.

### விக்ரமசிலா ஸர்வகலாசாலை

(கி. பி. 810—1119) விக்ரமசிலாவைப் பற்றி நமக்கறிவிக்கக் கூடிய வரலாறுகள் மிகவும் சுவல்பமாகவேயுள. இதற்கு முன் கூறப்பட்ட யுவான் சுவாங், ஐட்ஸிங் ஆகிய சீன யாத்திரிகர்கள் இருவரும் நாளந்தா கல்விக் கழகத்தைப் பற்றியே மிகவும் விரிவாக எழுதி வைத்திருக்கிறார்கள். தமது யாத்திரா அநுபவங்க

ளைப் பொறுத்தவரையில் தாம் கண்டும் கேட்டும் அறிந்த யாவற்றையும் மிகத் தெளிவாகக் கூறும் இயல்பு வாய்ந்த அவ்விருவரும் விக்ரம சிலாவைப் பற்றி பிரஸ்தாபம் செய்யாத காரணத்தை யுத்தேசிக்கும்போது, நாளந்தா ஸர்வ கலாசாலையொன்றே அவர்களுடைய நாட்களில் மற்றவைகளினும் சிறந்து விளங்கியிருக்க வேண்டுமென்றும் அதனுடைய மேம்பாடும் பெருமையும் ஓரளவு முன்னேறுவதற்கு ஆரம்பித்த பின்னரே விக்ரம சிலா மேனிலையையெய்தியிருத்தல்வேண்டுமென்றும் ஊகிப்பதற்கு இடமளிக்கின்றன. திபேத்திய நாட்டுச் சரித்திராசிரியராகிய "தாராநாத்' என்பவரால் எழுதப்பட்ட "பௌத்த சமய வரலாற்றில்" விக்ரமசிலாவைப் பற்றிச் சுவாரஸ்யமான குறிப்புகள் பல காணக் கிடக்கின்றன. விக்ரம சிலாவில் ஆசிரியர்களாப் பதவி வகித்தவர்கள் நாளந்தாவிலும் அவ்வாறே ஆசிரிய பதவி யேற்றிருந்ததாக அவர் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார். அதினின்றும் இவ்விரு வித்யாஸ்தாபனங்களுக்குள்ளாக ஆசிரியர்களை பரிவர்த்தனை செய்து கொள்ளும் வழக்கமும் இருந்ததாகக் கொள்ளலாகும்.

## ஸர்வகலாசாலை ஸ்தாபனமும் அதன் தோற்றமும்.

விக்ரம சிலா சர்வகலாசாலையையும், அதைச்சேர்ந்த பௌத்த விஹாரத்தையும் ஆதியில் பிரதிஷ்டை செய்வித்தவன் வங்கநாட்டில் அரசு செலுத்தி வந்த "பரம ஸௌகதபரமேசுவர பட்டார மஹாராஜாதிராஜ தர்மபாலன் என்னும் பௌத்த மன்னனேயாவான்." இந்த தர்மபாலன் கி. பி. 9-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசுரிமை யேற்றுக்கொண்டதாகக் கூறப்படுகிறது. கி. பி. 810ல் அவனுடைய போதாவின் கீழ் நாளுக்கு நாள் விக்ரமசிலா தழைத்தோங்கி வரலாயிற்று. அவனுக்குப் பின் வந்த அரசர்களும் இதனுடைய முன்னேற்றத்தில் மிகுந்த ஆர்வங்கொண்டு உழைத்து வந்ததன் பயனாகச் சுமார் 4 நூற்றாண்டுகளுக்கதிகமாக விக்ரம சிலாவின் புகழ் பாரதநாட்டில் மட்டுமேயன்றி அயல் நாடுகளிலும் ஒளி வீசித்திகழ்ந்தது. அக்காலத்தில் அந்த ஸ்தாபனத்தின் வித்தியார்த்திகள் என்று தம்மை யழைத்துக் கொள்வதில் மக்கள் ஓர் தனிப்பெருமை பாராட்டி வந்தனர்.

தர்மபால அரசன் பௌத்த மதத்தின் நான்கு பெரும் பிரிவுகளையும் சேர்ந்த பௌத்த பிக்ஷுக்களுடைய வாசத்திற்காக ஒவ்வொரு பிரிவிலும் 27 பிக்ஷுக்கள் விதம் 108பிக்ஷுக்களுக்கு நான்கு பெரிய விசாலமான விடுதிகளைக் கட்டு ஸர்வகலாசாலை நீடூழியாக நடந்து வருவதற்கும் அதைச் சேர்ந்த ஆசாரியர்களுடையவும், மாணுக்கர்களுடையவும் போஷணார்த்தமாகவும் ஏராளமான ஊர்களையும், நிலங்களையும் மானியமாக அளித்தான். தாத்காலிகமாக இங்கே காமதிக்க விரும்புகிறவர்களுக்குத் தனி விடுதிகள் வேறு கட்டப்பட்டன. தர்ம பாலனுக்குப் பின் வந்த அரசர்களும் தம் முறைக்குப் போட்டி போட்டுக்கொண்டு இச்சர்வகலாசாலையின் அபிவிருத்திக்காக பெருநன் கொடைகளை வழங்கி வந்தார்கள் என்பதற்குப் போதிய அத்தாட்சிகள் சரித்திர பூர்வமாகக்காணப்படுகின்றன. இச்சர்வகலாசாலைக் கட்டிடங்களில் சாஸ்திரமண்டபமென்ற பெயரால் அழைக்கப்பட்ட மத்தியக் கூடம் ஒன்றிருந்தது. அதற்கு ஆறு வாயிற்படிகள். இந்த ஆறு வாயிற்படிகளும் அந்தப் பிரிவைச் சார்ந்த ஆறு பெரிய கல்லூரிகள் அல்லது காலேஜ்களின் முக்கிய வாயில்களாகவும் இருந்தன. இக் கல்லூரி ஒவ்வொன்றிலும் 108 ஆசிரியர்கள் வித்யார்த்திகளுக்கு நானுவிதமான கலைகளைப் போதித்து வந்தனர். மேலும் 8000 பேர்களுக்கு மேல் ஏககாலத்தில் நெருக்கமின்றி குழுமியிருப்பதற்கேற்ற மிகப் பெரிய மைதானமொன்றும் இருந்ததாம்.

சர்வகலாசாலையைச் சுற்றிலும் உயரமான மதிற் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. அதன் முன் புறச்சுவரில் பிரதம வாயிலுக்கு வலது புறத்தில் ஒரு சமயம் இச்சர்வகலாசாலையின் தலைமை யாசிரியராகவும் அத்யக்ஷகராகவும் பதவி வகித்த நாகார்ஜுனர் என்பவருடையவும் இடது பக்கத்தில் விக்ரமசிலாவின் பெருமைக்கே பெரிதும் காரணஸ்தராக விருந்த த்வீபங்கரா என்ற பிரசித்தி பெற்ற பௌத்த பிக்ஷுவுடையவும் திருவுருவங்கள் தீட்டப் பெற்றிருந்தனவாம். வாயிலுக்கு வெளிப்புறத்தில் ஓர் தர்மசாலையிருந்ததாகவும் சர்வகலாசாலையின் வாயிற்கதவுகளெல்லாம் மூடப்பட்டபின்னர் அதிதிகளாக வருவோரின் சௌகரியாதிகளை இத்தர்ம சாலையின் நிர்வாகஸ்தர்கள் கவனித்து வந்தார்களென்றும் அறியக்கிடக்கிறது. இந்தப் பெரிய சர்வ கலாசாலையின் நிர்வாகத்தை அரசாங்கப் புரோகித சிரேஷ்டரின் தலைமைக்குட்பட்டு ஆறு பெயர்களடங்கிய ஒரு சபையார் திறம்பட நடத்தி வந்தனர். கல்லூரிகளில் ஆசிரியர்களாக யிருந்தவர்களைத் தவிர அந்தந்த சாஸ்திரங்களில் மிகுந்த பிரக்யாதியடைந்த ஆசாரியர்களும், அர்ச்சகர்களும், மேற்பார்வையாளர்களும் வேறு பலரும் இருந்தார்கள்.

## "பண்டித" பட்டமும் பட்டமளிப்பு விழாக்களும்

கலாசாலையின்படித்துத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு இச்சர்வ கலாசாலையின் சார்பாக "பண்டிதர்"களென்ற பட்டத்தை யளித்துக் கௌரவித்து வந்தனர். இப்பட்டங்களை யளிப்பதற்காகக் கூட்டப்படும் விழாக்களில் ஸர்வ கலாசாலையின் அத்யக்ஷகர்கள் என்ற முறையில் அரசர்களே தலைமைவகித்து வித்யார்த்திகளுக்குப் பட்டத்தை வழங்குவர்.

## பிரசித்தி பெற்ற சில "பண்டிதோத்தமர்கள்"

விக்ரமசிலா கல்விக் கழகத்தின் பண்டித பட்டத்தால் கௌரவிக்கப்பெற்று நாடெங்கும் கீர்த்தியடைந்த பெரியார்களில் காச்மீர நாட்டு வாஸியான ரத்னவஜ்ரர் என்பவரும் ஒருவர். அதனுடன் அவர் இச்சர்வ கலாசாலையில் "த்வார பண்டிதர்" என்னும் உயர்ந்த ஸ்தானத்திற்கு நியமிக்கப் பெறும் பெருமையும் அளிக்கப் பட்டவர். அம்மாதிரியாகவே ஆசாரிய ஜேதாரி என்பவருக்கு மஹிபால மன்னனல்

(33-ம் பக்கம் பார்க்க)

அசல் புளு ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில்
உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப் சந்த்
175, சைனுபஜார், மதராஸ்.

G.கன்னய்யா கம்பெனி
இரும்புபெட்டி வியாபாரம்.

நெ.137, பிராட் வே, மதராஸ்

ரூ. 100 இனும்
(மாந்திரீக மோதிரம்)


காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.
BENGAL MESMERISM HOUSE,
(S. M.)Panchpota, BENGAL

ஜலதோஷம்-அலட்சியத்தால்
கடுமையான நோய்கள் ஏற்படலாம்!

ஜலதோஷத்தை அலட்சியமாக விட்டால், அது பிறகு இன்புளுவென்ஸாவாகவோ அல்லது நியுமோனியாவாகவோ மாறலாம். எனவே ஆரம்பத்திலேயே மிஸ்டல் உபயோகியுங்கள். மிஸ்டல் சிறந்த முறையைக்கொண்டு தயாரிக்கப்படுவது. இலவச டிராப்பருடன் கூடிய ஒரு புட்டி மிஸ்டலை இன்றே வாங்குக.



Mistol
REG. TRADE MARK
ஜலதோஷத்தை முளையிலேயே கிள்ளி எறிகிறது.

தென்னிந்தியப் பிரமுகர்கள்



ராவ்பகதூர்

# ஏ. சபாபதி முதலியார்

(1838—1903)

(கே. எஸ். ஆர்)

சென்ற நூற்றாண்டில், பொது வாழ்வில் மிக்க ஈடுபட்டு தேச சேவை செய்தவர்களுள் ராவ் பஹதூர் சபாபதி முதலியாரை நாம் பிரதானமாகக் குறிப்பிட வேண்டும். பெல்லாரியைச் சார்ந்த முதலியாரவர்கள் மாகாண சட்டசபைகளுக்கு ஜனப்பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையளிக்கப்பட்டபோது, சென்னை சட்டசபை அங்கத்தினராகப் பொறுக்கியெடுத்து அனுப்பப்பட்டவர். சென்னை சட்டசபையில் சுமார் 40 வருஷங்களுக்கு முன்பு இவரும், தஞ்சை கல்யாணசுந்தரமய்யரும், சென்னை பி. ரங்கய்யா நாயுடுவும், மதுரை ராய்பஹதூர் ராமசுப்பய்யரும் மிக்க உழைத்தவர்கள். அநேகம் சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தாரின் நடவடிக்கைகளைப்பற்றி இவர்கள் யாவரும் அங்கு பிரஸ்தாபித்து இழைக்கப்பட்டு வரும் அநீதிகளைத் தைர்யமாகக் கண்டித்துப் பேசி வந்தனர். ஆகையால் இம்மாகாண முன்னேற்றம் சம்பந்தமாக ஸ்ரீமான் சபாபதி முதலியார் விசேஷ பங்கு எடுத்துக்கொண்டவர். வர்த்தகத்துறையில் ஏராளமாகச் சம்பாதித்து வந்த இவர், அவற்றை யெல்லாம் பொதுநலனுக்காக விநியோகம் செய்துவந்தார். இவர் போன்றவர்கள் அரசியல் துறையிலும் இறங்கியதால், இத்தேசத்திற்கு மிகுந்த லாபமும் பெருமையும் கிட்டியது. இவர்போன்றவர்கள் ஹிந்துக்களுக்கு இருந்துவரும் திறமையும் சக்தியும் இதர தேசத்தினர்களுடையதைக் காட்டிலும் குறைந்ததல்ல என்பதை நன்கு நிரூபித்தவர்கள்.

ராவ்பஹதூர்சபாபதி முதலியார் 1838-ம் வருஷத்தில் பூந்தமல்லி வேளாளர் மரபில் ஒரு வைதிக குடும்பத்தில் பிறந்தார். வெகு இளம் வயதிலேயே இவர் தமது தாய் தந்தையரை இழந்துவிடவே, இவரை இவரது மாதாமஹர் சம்ரக்ஷித்து வந்தார். இந்தப் பாட்டனர் கமிஸேரியட் ஆபிஸின் மானேஜராக விருந்து வந்தவர். அவர் இவருக்குப் போதுமான வித்தியாப்பியாஸத்தைச் செய்வித்தார். இவர் தமது பாட்டனரிடமிருந்து ஏராளமான திரவியத்தையும் உயர் நடத்தையையும் ஸ்வீகரித்துக்கொண்டார்.

### சர்க்கார் உத்தியோகத்தில் வெறுப்பு

பின்பு அவர் இவருக்கு பெல்லாரி கலெக்டராபீஸில் ஒரு குமாஸ்தா உத்தியோகத்தை வாங்கிக் கொடுத்தார். அப்போது இவருக்கு 7 ரூபாய் மாதச் சம்பளமாகக்கொடுக்கப்பட்டு வந்தன. இவ்வாறு இந்த ஸ்தானத்தில் இவர் சுமார் எட்டுவருஷகாலமிருந்து, அந்த ஆபீஸில் இங்கிலீஷ் குமாஸ்தாவாக மாதம் 20 ரூபாய் சம்பளத்தில் இவர், உயர்ந்தார். இவ்வுத்தியோகத்தை சிலகாலம் இவர் வஹித்து பின்பு மிகுந்த வெறுப்பினுல் அதை உதறித் தள்ளிவிட்டார். இதே சமயத்தில்தான் இவரது பாட்டனர் இறந்துவிட்டார். இவ்வுத்தியோகத்தில் இவர் இருந்து வந்ததனுல் இவர் நிர்வாக வேலைகளைப்பற்றித் தெரிந்து கொள்வது சாத்தியமாகியது; தவிரவும் இவருக்கு இவ்வாறு கிடைத்த விஷயஞானமானது பிற்காலத்தில் இவருக்கு மிகவும் உதவியது.

தமது பாட்டனரின் மரணத்திற்குப் பின்பு இவர் ஒரு லண்டன் வியாபாரிகளுக்காக, பருத்தியை வாங்கும் தொழிலை ஏற்றுக்கொண்டார். இதனுல் இவருக்கு கமிஷன் லாபம் கிடைக்கலாயிற்று. இம்மாதிரி ஏஜண்டாகவிருந்து இவர் ஏராளமாச் சம்பாதித்தார். 'நான் கவர்ன்மென்ட் உத்தியோகத்தை வெறுத்துவிட்டேன். ஆனுல் ஒரு சென்னை ஆங்கில வியாபாரக் கம்பனிக்கு என்னுடைய உழைப்பானது மாதம் மூவாயிரம் அல்லது நாலாயிரம் ரூபாய்கள் பொறுமானமுள்ளதாக விருந்தது; அவர்கள் இரண்டு வருஷகாலம் எனக்கு மேற்குறிப்பிக்கப்பட்ட தொகையை மாதாமாதம் கொடுத்து எனது சேவையைத் தங்களுக்கு மிகப் பயன்படுத்திக் கொண்டனர்'' என்று இவர் பின்பு ஒரு சமயம் பப்ளிக் சர்விஸ் கமிஷன் முன்பு மனக்கொதிப்புடன் எடுத்துச் சொன்னுர். மேற்கூறிய கமிஷன் வருமானம் போதாதென்று இவர் 1875-ல் மிஸ்டர் அலக்ஸாண்டர் ஹார்வி என்பாருடன் பங்காளியாகச் சேர்ந்துகொண்டு தமது வர்த்தகத் தொழிலைத் தீவிரமாக நடத்தி வருவாராயினர்.

### பருத்தி வியாபாரம்

இதுபற்றி இவர் வெகுகாலம் வரையில் "ஹார்வி சபாபதி" என்று வழங்கப்பட்டு வந்தார். இதே பெயருடன் தான் இவரது கம்பனியும் வழங்கி வந்தது. சில வருஷங்களுக்குப் பின்பு இவர் மிஸ்டர் ஹார்வியை விட்டு, கூட்டுத் தொழிலினின்றும் நீங்கிக் கொண்டார்; உடனே தாமே சொந்தமாக, தமது பெயருடன், அதாவது "ஏ. சபாபதி முதலியார் அண்டு கம்பனி" என்ற பெயருடன் இவர் ஒரு புதிய கம்பனியை ஆரம்பித்து நடத்தி வருவாராயினர். சென்னையிலும் பம்பாயிலும் இந்தக் கம்பனியின் கிளை ஆபீஸ்களை இவர் ஏற்படுத்தினுர். பருத்தியைப் பதம் செய்யும் யந்திரங்களையும் தொழிற் சாலைகளையும் இவர் இத்தேசத்தில் பல இடங்களிலும்நிர்மாணித்தார். பெல்லாரியை இவர் தமது கம்பனியின் தலைமை ஆபீஸிற்கு இருப்பிடமாக வைத்துக் கொண்டார். லண்டன், லிவர்

மல்லிகாவின் பாக்யமே பாக்யம்!

போன வருடம் ஐயோ! அப்பா! என்று கஷ்டப்பட்டவள் இவ்வருடம் ஒரு குழந்தையை அன்புடன் அணைகிறுள்

"வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி"

ஸ்திரீகளுக்கு மாதக்குளி காலத்தில் உண்டாகும் சூதக வாய்வு, சூதக பந்தம், சூதகக்கட்டினுல் உண்டாகும் வயிற்று வலி, பேதி, பசியின்மை, வாந்தி, மயக்கம், தலைவலி, ஜ்வரம், உடல் ஸ்தூலித்தல் முதலிய எல்லா கர்ப்பாசய வியாதிகளையும் கண்டித்து மலட்டுப் பூச்சிகளைக்கொன்று, கருப்பைக்கு பலந்தந்து ரக்ஷித்து சந்தான பாக்யத்தையளிக்கும் உன்னத ஔஷதம். பத்தியமில்லை, செட் விலை ரூபா 5.

வேலன்ஸ்மெடிகல் ஹால் 61, காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர், சென்னை

பூல் முதலிய பிரதான நகரங்களிலும் ஐரோப்பா கண்டம், ஜப்பான் தேசம் ஆகியவற்றின் முக்கிய நகரங்களிலும் இவர் தமது தொழிலிற்காக கமிஷன் ஏஜண்டுகளை ஏற்பாடு செய்து வைத்திருந்தார். ஆகையினால் இவரது தொழிலானது பல பக்கமும் நன்கு விஸ்தரித்து வியாபித்திருந்தது. பன்னிரண்டு நீராவி பருத்தி யந்திரங்கள், மூன்று தொழிற்சாலைகள், இரண்டு தறிநெசவுச்சாலைகள் ஆகியவற்றை இவர் சுமார் 10 வருஷகாலத்திற்குள்ளாகவே தமது தொழிலின் அபிவிருத்திக்காக ஏற்படுத்தினார். இவர் கீழ் வேலை செய்து வந்தவர்களின் தொகை சுமார் 2000 ஆகும். இங்கிருந்து வெளி நாடுகளுக்கு இவரே அதிகமாகப் பருத்தியை ஏற்றுமதி செய்துவந்தார். இவரது கம்பனியின் பெயர் மேல்நாடுகளில் எல்லாம் மிகப் பிரசித்தமாகியது; ஆதலால் இவரது சாமான்களுக்கு விசேஷ மதிப்பும் பஹுமானமும் கிடைத்தன.

### தாது வருஷப் பஞ்சமும் ஸ்ரீமான் முதலியாரின் உதவியும்

இவர் இவ்வாறு தாம் ஏராளமாகச் சம்பாதித்து வந்ததைத் தான தர்மத்தில் செலவழித்து வந்தார். 1876-78-ம் வருஷங்களில் ஏற்பட்ட பஞ்சத்தின்போது இம்மாகாணத்திய ஜனங்கள் மிகவும் வாட்டப்பட்டனர். இத்தகைய கொடிய பஞ்சம் இதுவரை நேர்ந்தது கிடையாது. தக்காணத்தல் இருக்கும் தமது தொழிற் சாலைகளில் ஒவ்வொன்றிலும் பஞ்சநிவாரண முயற்சிகளை இவர் அனுசரித்தார். அநேகருக்கு இவர் மிக உதவினார். பிரதிதினம் சுமார் 4000 ஜனங்கள் இவரால் இக்காலத்தில் போஷிக்கப்பட்டு வந்தனர். இவ்வாறு இவர் பெருந்தன்மையுடன் நடந்துகொண்ட சில காலந்திற்குப் பின்புதான் சென்னை கவர்ன்மெண்டார் பஞ்சத்துடன் போராடுவதற்கான வழிகளைப் பின்பற்றலாயினர். இப்பஞ்சகாலம் முழுமையும் இவர் சென்னை கவர்னராக விருந்த பக்கிங்ஹாம் பிரபுவின் அத்தியந்த ஆலோசகராக விருந்து வந்தார். இந்தக் கொடிய தாது வருஷப்பஞ்சத்தின்போது அநேகம் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை விற்றுவிட்டனர். அநேகர் தங்களுடைய ஆப்தர்களையும் துறந்து ஓடிவிட்டனர். அநேகர் தேவதாரி இலைகளையும் சில கிழங்குகளையும் கொதிக்கவைத்துப் புசித்து வந்தனர். திடகாத்திரர்கள் மிக மெலிந்துவிட்டனர். காலரா போன்ற தொத்து வியாதிகள் அநேகரைக்கொள்ளை கொண்டு போயின. இக்காலமெல்லாம் ஸ்ரீமான் முதலியார் பொது சேவையில் முன் நின்றார். இவர் [illegible] அஸ்ரமத்தை ஆரம்பித்து சுமார் ஆறு வருஷகாலம் அதை நடத்தினர். இதில் அநேகம் ஏழைச் சிறுமிகளை, ஜாதி வித்தியாசமின்றி சம்ரக்ஷித்து வந்தார். தம் கீழ் வந்த அனாதைகளை இவர் அவர்கள் சரியான வயதிற்கு வரும் வரையில் பாவித்து வந்தார். இது தவிர பெரியவர்கள் பலருக்கும் மாதா மாதம் இவர் உபகாரச் சம்பளம் உதவி வந்தார். இவர் தமது புத்திகூர்மையின் மஹிமையினால் சில புதிய விஷயங்களைக் கண்டெடுத்தார். சாதாரணமாக வேலிகளில் வளர்ந்து கிடக்கும் சப்பாத்திச் செடிகளில் இருக்கும் முள்களை நீக்கி மிருந்திருக்கும் இலைகளைத் துண்டு துண்டாக வெட்டி ஆடுமாடுகளுக்கு உணவுப் பொருளாகக் கொடுக்கலாம் என்ற வழியை இவர் கண்டு பிடித்து, அனுசரித்து வந்தார். முள்களை நீக்கி விடுவதற்காகத் தாம் கண்டு பிடித்த புதிய கருவியை இனமாக நானு பக்கங்களிலும் பஞ்சத்தினால் பிடிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களில் எல்லாம் கொடுத்து உதவினார். இதனால் ஆடுமாடுகள் பஞ்சத்தில் சேதமடையாமலிருப்பது சாத்தியமாகியது இதற்குப் பின்பும் வெகு காலம் வரையில் இக்கருவிகளை அநேகர் வேண்டி வந்தனர்

இவற்றை விற்றுக்கிடைக்கும் வருமானத்தையும் இவர் தர்மத்திற்காகவே விநியோகப் படுத்திவந்தார். இப்புதிய கருவியைக்கண்டு பிடித்ததற்காக, மைசூர், ஹைதராபாத் ஆகிய சமஸ்தானங்களின் கவர்ன்மெண்டார் இவருக்குத் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்..

பெல்லாரி, "சபாபதி முதலியார் ஆஸ்பத்திரி"யைக் கட்டுவதற்கு இவரே உதவியவர். இதில் சுமார் 50 நோயாளிகள் இவரது காலத்தில் இருந்து வரலாம். இரண்டு பெண் பள்ளிக்கூடங்களையும் இவர் திறந்துவைத்தார். இதற்காக இவர் சுமார் 10,000 ரூபாய்களுக்கு மேலாகவே நன்கொடையளித்தார். இவருக்கு ஒரு கைத்தொழில் பள்ளிக்கூடத்தையும் அதன் அங்கமாக ஒரு பொருட்காட்சியையும் நிறுவவேண்டுமென்ற அபிலாஷை பலகாலமாகவே இருந்துவந்தது.

### பெல்லாரி முனிஸிபல் சபையில் சேவை

இவர் சுமார் 20 வருஷகாலம் பெல்லாரி முனிசிபல் சபை அங்கத்தினர்களுள் ஒருவராக விருந்தார். இதில் 9 வருஷ காலம் இவர் முனிசிபல் சேர்மனாகவும் இருந்தார். இவர் இக்காலம் முழுமையும் நகரின் அபிவிருத்தியையே சதா நாடி வந்தார். பொதுமக்களின் நலனுக்கு எது அவசியமோ அதைப் பின்பற்றுவதில் இவரே முன் நின்று வந்தார். காலரா போன்ற பீடைகளுக்கு அந்த நகரம் பிரசித்தமாக விருந்ததுண்டு. ஆனால் இவர் அனுஷ்டித்த முறைகள் பற்றி அவை அவ்வூரை அணுகுவதில்லை. "இந்தியா முழுமையும் இவரது முனிசிபல் நிர்வாகம் இந்த சாம்ராஜ்யத்திலேயே மிகச் சிறந்தது என பலரும் பேசக் கேட்டிருக்கிறேன். கடன் தொந்தரவு இல்லாமலிருப்பது அது ஒன்றுதான். தவிரவும் அங்கு பண இருப்பும் அதிகம்" என்று காலஞ்சென்ற மிஸ்டர் கெய்ன் ஒரு சமயம் தமது பத்திரிகையில் எழுதினார். 1887-ம் வருஷ உத்தரவில் அரசாங்கத்தார் இம்முனிசிபாலிடியின் பொக்கிஷ ஸ்திதி நன்றாகவிருப்பதாகச் சந்தோஷித்தனர். கவர்ன்மெண்டார் மறு வருஷம் முனிசிபாலிடி நிர்வாகமானது அதிக ஊக்கத்தையும் காட்டுவதுடன் திருப்தியையும் அளிப்பதாக எழுதிப் பாராட்டினர்; 1889-கவர்ன்மெண்ட் உத்தரவில் எழுதியதாவது:—"காலரா நகரைப் பிடித்தபோது சேர்மன் தாமே எடுத்துக்கொண்ட சிரத்தையானது ஜில்லா வைத்திய உத்தியோகஸ்தரால் மிகவும் பஹுமானிக்கப்பட்டிருக்கின்றது".

1883-லோகல்பண்டு முனிசிபல் நிர்வாகம் ஆகியவைகளைப் பற்றி, வைஸ்ராய் ரிப்பன் பிரபு தமது பிரசித்தமான பிரகடனத்தில் விதித்த வழிகளை யனுசரித்து இரண்டு மசோதாக்களைச் சட்ட சபையில் ஆலோசனைக்காகத் தயார் செய்வதற்காக சென்னை கவர்ன்மெண்டார் ஒரு கமிஷனை நியமித்தனர்; இதில் முதலியாரும் ஒருவராக ஸ்தானம் கொடுக்கப்பட்டார். முதலியார் விசேஷ பங்கும் எடுத்துக்கொண்டார்; இக்கமிட்டியார் தயாரித்த மசோதாக்கள்தான் பின்பு 1884-ம் வருஷத்திய நான்காவது, ஐந்தாவது சட்டங்களாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன. ஸ்தலஸ்தாபன நிர்வாகங்களில் இவர் எடுத்துக் கொண்டுவந்த சிரத்தை பற்றி இவருக்கு 1888-ம் வருஷம் ஜூன் மாதம் "ராவ்பஹதூர்" பட்டம் கொடுக்கப்பட்டது. இச்சமயம் "ஹிந்து" பத்திரிகை, "இது போன்ற ஒரு கீழ்த்தரப் பட்டத்தால் அரசாங்கத்தார் இவரை அவமா

(89-ம் பக்கம் பார்க்க)

இந்தியா கவர்ன்மேண்டில் மேடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மேண்டு இந்திய வைத்திய கவர்னிங் பாடி & ஸெண்டிரல் போர்டு மெம்பரும், கவர்ன்மேண்டு வைத்திய கலாசாலை & I. M. S. ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய



(Sastriar in Govt. Medical dress)

**மஹா பில்வாதி லேகியம்**

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத் துவேஷம், அஜீர்ணம், மலச் சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

**ஆனந்த பற்பொடி**

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

**ஆனந்த பற்பசை**

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு. எங்கும் கிடைக்கும்.

கனம் சீப் ஜஸ்டிஸ் ஸர் M. வேங்கடசுப்பராவ், Kt., சென்னை ஹைகோர்ட்டு அவர்கள் எழுதுகிறார்:—

"நான் வைத்ய ஸித்தாச்ரமத்தைப் பார்வையிட்டேன். அது செய்து வரும் வேலைகளுக்கு எல்லா அபிவிருத்திகளையும் நான் கோருகிறேன். இவருடைய பிரயத்தினங்கள் இந்த பூர்வீகமான ஆயுர்வேதத்தை சாஸ்திரீயமாக பயின்று அனுபவத்தற்குக் கொண்டுவரும் மார்க்கத்தில் ஆதரவுக்கும் அபிவிருத்திக்கும் தகுந்தவைகளே."

கனம் ராஜா of சிவகங்கா அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்யரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரிகளை மிக்க சந்தோஷத்துடன் நான் பொது ஜனங்களுக்கு சிபார்சு செய்கிறேன். இவருடைய மருந்துகளை உபயோகிக்கும்படி ஸந்தர்ப்பம் நேர்ந்து அவைகளை உபயோகித்து அம்மருந்துகளால் நான் ஜெயமடைந்து இருக்கிறேன். வைத்தியமுறையில் ஒவ்வொரு ஸந்தர்ப்பங்களிலும் அவர் எனக்கு பரிபூர்ணமான திருப்தியைக் கொடுத்திருக்கிறார்."

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனம்.

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,**

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்.



சுப்பராயன் கடிதத்தின் பொருளை யூகித்து அறிந்தான். "பர்வதத்திற்கு அவளுடைய பழைய எஜமானி ஐயாயிரம் ரூபாய் உயில் எழுதி வைத்துவிட்டு இறந்துவிட்டாள்" என்று யாரோ வக்கீல் எழுதியிருப்பதாகச் சொன்னான்.

# மறு விவாகம்

(பி. ஆர். ராமஐயங்கார், பி. ஏ.)

ஆறுமுகம் வாயிற்றிண்ணையில் ஒரு முழ நீள சுருட்டைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அப்பொழுது அவனுடைய தங்கை பர்வதம், ஒரு குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டும் தோளில் வண்ணான் சுமக்கமுடியாத அழுக்குத் துணிமணிகளைத் தூக்கிக் கொண்டும் வெளியே வந்தாள்.

"எங்கேயம்மா போகிறாய்? குளத்துக்கா, அல்லது கிணற்றுக்கா?"

"குளத்துக்குத் தான். கிணற்று ஜலம் நன்றாக இல்லையென்று அண்ணி சொல்கிறாள். அவளுடைய உடம்புக்கு ஒத்துக்கொள்ளவில்லையாம்" என்று விடையளித்தாள் பார்வதி.

"அம்மா, மணி பதினொன்றாயிற்றே. வெயில் வந்துவிட்டதே. சாயங்காலம் போகப்படாதா?"

"அண்ணிக்கு வேறு புடவையில்லையாம். இது வந்ததும் உலர்த்தி யுடுத்திக்கொள்ள வேண்டுமாம்"

"கொஞ்சம் சீக்கிரமாகவாவது கிளம்பியிருக்கலாமே!"

"என்ன செய்வது? அண்ணிக்குத் தலைவலி. வீட்டு வேலை [illegible]யெல்லாம் செய்தேன். பிறகு சமையலும் ஆயிற்று. இப்பொழுதுதான் கை ஒழிந்தது."

"சரி, சீக்கிரம் போய்விட்டு வா" என்றான் ஆறுமுகம்.

பர்வதம் குளத்திற்குச் சென்றாள்.

பர்வதத்தின் தலை மறைந்தவுடனே, தன்னுடைய பாயில் அதுவரையில் படுத்துத் தலைவலியென்று புரண்டுகொண்டிருந்த கோகிலம் எழுந்தாள். முகத்தைக் கழுவிக்கொண்டாள். தலையில் போட்டிருந்த சுக்குப் பசையை நன்றாகக் கழுவினாள். கணவன் சாப்பிடுவதற்காக இலையைப் போட்டு, வெளியே வந்து, ஆறுமுகத்தைச் சாப்பிடவழைத்தாள்.

ஆறுமுகம் மணையில் உட்கார்ந்தான். அவன் இலையில் அன்னம்கூடப் பரிமாறவில்லை. அப்பொழுதே கோகிலம் தன்னுடைய ராமாயணத்தையாரம்பித்தாள்.

"என்னுங்கோ, இனி என்னால் ஒங்க வீட்டிலே அஞ்சு நிமிஷம்கூடத் தங்கமுடியாது" என்றாள்.

"என்னடி இலையில் சோறு பரிமாறுவதற்குள் பெரிய ராமாயணக் கட்டை அவிழ்க்கிறாய்?"

"ஆமாம், நான் சொல்வது ராமாயணம்தான். ஒங்க தங்கை சொல்வதெல்லாம் பாரதம்."

"என்ன சமாசாரம் சொல்லேன்?"

"சாப்பிட உங்களை உட்கார வைத்துவிட்டு, இதெல்லாம் சொல்வது சரியில்லைதான். ஆபினும் தாலியறுத்தவள் தாய் வீடு வந்தால் சண்டைதானே"

"என்ன, உனக்கும் பர்வதத்துக்கும் சண்டையா? என்ன காரணம்?"

"என்னமோ தலைவலி அசாத்தியமா இருந்தது. அஞ்சு நிமிஷம் போய் படுத்துண்டா அவளுக்குப் பொறுக்கலையே. கண்மண் டெ வெடிச்சுப் போய் விடறதே. இவதான் எப்பப்பவும் வீட்டிலே சமெச்சி போட்டுண்டு இருந்தாளா என்ன?"

"சரி; தெரிந்துகொண்டேன். இப்பொழுது என்ன செய்யச் சொல்கிறாய்?!'

'ஒன்று அவளாவது இங்கிருந்து ஒழியணம். இல்லாவிட்டா நானாவது எங்க தாயார் வீட்டுக்குப் போறேன்."

"அவசரப்படாதே. எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்கிறேன். கொஞ்சம் சோறு போட முடியுமா, முடியாதா?"

"நான் போடாமெ, ஒங்க தங்கைதான் தினம் சோறு போடறாளா? என் ஒடம்பு எப்படியிருந்தாலும் கவனிக்காமெ சமெச்சு போடறத்துக்கு இதுதானு சொல்லுவீங்கோ. எல்லாம் அந்தப் படுபாவியிருக்காளே, அவளுடைய போதனை தலைக்கு ஏறிவிட்டது" என்றாள் பர்வதம்.

ஆறுமுகம் ஆலோசித்தான். தன்னுடைய மனைவியும் தங்கையும் ஒரே வீட்டில் இருந்தால், இப்படித்தான் எலியும் பூனையும்போல் சதா சண்டை போட்டுக்கொண்டிருப்பார்கள் என்பதறிந்தான். மனைவியை வீட்டை விட்டுப் போகச் சொல்வதோ முடியாது. தங்கையைத்தான் போகச் சொல்லவேண்டும். அதற்கு முன் அவளுக்கு ஒரு வேலை பார்த்துத் தரவேண்டும். இன்றேல் அவளுக்கு மற்றோர் விவாகம் செய்து வைக்க வேண்டும். ஆனால், விதவையை விவாகம் செய்துகொள்ள எவரும் முன் வரமாட்டார்களே! பர்வதம் அவ்வளவு அழகு வாய்ந்தவளுமில்லை. அவளுக்குக் கையில் காலணுவும் கிடையாது. இப்படிப்பட்ட விதவையை எவன்தான் கலியாணம் செய்துகொள்வான்?

ஆம்; பணம் பத்தும் செய்யும். இந்த காலத்தில் பணம் இருப்பவர்களையெல்லோரும் சுற்றிக்கொள்வர். ஆகையால் பர்வதம் மறு விவாகம் செய்துகொள்ளவேண்டுமானால் அவள் பணக்காரியாகவேண்டும். அவளைச் செல்வியாக்காவிட்டாலும், ஊரார் அனைவரும் அவள் பணக்காரியென்று நம்பும்படிச் செய்யவேண்டும். அதற்கு என்ன வழியிருக்கிறது என்று ஆலோசித்தான். கடைசியில் அவனுக்கு ஒரு சிறந்த ஆலோசனை தோன்றியது. அதன்படியே செய்வதென்று ஆறுமுகம் தீர்மானித்தான்.

ஆறுமுகத்தின் யுக்திக்கு ஐந்து ரூபாய் செலவாயிற்று. சென்னைக்குச் சென்று, அங்கு தனக்குத் தெரிந்த ஒரு வக்கீல் குமாஸ்தாவைப்பேட்டி கண்டு பேசினான். தன்னுடைய உபாயத்தைச் சொல்லி, தன்னுடைய தங்கைக்கு ஒரு கடிதம் அனுப்பும்படியும், அந்தக் கடிதத்தில் பர்வதத்திற்கு அவளுடைய பழைய எஜமானி ஐயாயிரம் ரூபாய் தரும்படி


மியூச்சுவல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி,
லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :
187, மவுண்ட் ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்.

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி



உயில் எழுதி வைத்துவிட்டு இறந்து விட்டாள் என்று எழுதும்படியும் ஏற்பாடு செய்தான்.

மறுநாள் ஆறுமுகம் வழக்கப்போல சுருட்டுப் பிடித்துக்கொண்டு வாயிற் திண்ணையில் உட்கார்ந்திருந்தான். எதிர் வீட்டு வாயிலில் சுப்பாராயன் உட்கார்ந்துகொண்டிருந்தான். போதாததற்குக் கோகிலம்மாள் பெண்கள் நால்வருடன் கடையில்வம்பு அளந்துகொண்டிருந்தாள். அப்பொழுது தபாற்காரன் ஒரு கவரைக் கையில் எடுத்துக்கொண்டு, "பர்வதம்மாள்! பர்வதம்மாள்!" என்று ஊரில் இருப்பவர்களுக்கு எல்லாம் காது கேட்கும்படிச் சொன்னான்.

சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்த ஆறுமுகம் திண்ணையிலிருந்து கீழே குதித்து எழுந்து, தபாற்காரனிடமிருந்த கடிதத்தை வாங்கிப் பரபரப்பாக அதனையுடைத்து உள்ளே பிரித்துப் பார்த்தான். கடிதம் ஆங்கிலத்தில் டைப் அடிக்கப்பட்டிருந்தது. ஆறுமுகத்துக்கோ ஆங்கிலம் தெரியாது. ஆகையால் எதிர்வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த சுப்பாராயனைக் கூப்பிட்டு, அதனை வாசித்துப் பொருள் சொல்லும்படி வேண்டினான்.

அந்த ஊரில் ஆங்கிலம் தெரிந்தவன் சுப்பாராயன் ஒருவனே. அவன் எங்கோ ரெயில்வேயில் போர்ட்டர் உத்தியோகம் செய்திருந்தவன். மனைவி மரித்தபின்னர் தன்னுடைய சொந்தக் கிராமத்தில் வசிக்க வந்துவிட்டான். அவன் கையில், கொஞ்சம் ரொக்கம் இருந்தது. அதனைக்கொண்டு ஜீவித்து வந்தான். அவனை எத்தனையோ பேர் மறு விவாகம் செய்துகொள்ளும்படி தொந்தரவு செய்தனரேனும் தன்னுடைய ரொக்க இருப்பு இவ்வளவு என்பது தெரிந்திருந்ததால் அவன் மறு விவாகம் செய்துகொள்ளவில்லை. அவனுக்கு ஆங்கிலம் அதிகம் தெரியாததால், அந்தக் கடிதத்தைப் படிப்பது கொஞ்சம் சிரமமாக இருந்தது. அவனுக்குத் தெரியாத வார்த்தைகள்தான் கடிதத்தில் நிறம்பியிருந்தன. ஆயினும் மெள்ளக்கடிதத்தின் பொருளை யூகித்து அறிந்தான். "பர்வதத்திற்கு அவளுடைய பழைய எஜமானி ஐயாயிரம் ரூபாய் உயில் எழுதி வைத்து விட்டு இறந்து விட்டாள்" என்று யாரோ வக்கீல் எழுதியிருப்பதாகச் சொன்னான்.

இந்தக் கடிதத்தைக் கண்டதும் ஆறுமுகம் அடைந்த ஆனந்தம் என்னே! கோகிலம் இந்தச் சந்தோஷச் செய்தியைக் கேட்டதும் பர்வதத்தைப் புகழ்ந்து பேச

ளுடைய நண்பர்களும் கூடிக்கொண்டனர்.

அதனைக் கேட்டதும் பர்வதமும் சந்தோஷத்தால் கண்ணீர் விட்டாள்.

ஆறுமுகம் உடனே, "அம்மா, பர்வதம், உனக்கென்னவோ அதிக வயதாகவில்லை. கையில் பணமும் வரப்போகிறது. மற்றோர் விவாகம் செய்துகொள்வதுதானே? நம் ஜாதியில் இது வழக்கமாயிற்றே" என்றான்.

"ஆமாம், கன்னிகைகள் எல்லாம் கலியாணமாகாமல் இருக்கும்போது என்னை யார் கலியாணம் செய்து கொள்ளப் போகிறார்கள்" என்றாள் பர்வதம்.

"உனக்கென்னவோ ஐயாயிரம் ரூபாய் வரப்போகிறது. பணமில்லாத வரையில்தான் யாரும் உன்னைக் கலியாணம் செய்துகொள்ள முன்வரவில்லை. உன்னிடம் சொத்து இருக்கிறது என்றால் எத்தனையோ பேர், 'நான் கலியாணம் செய்துகொள்கிறேன்' நான் கலியாணம் செய்துகொள்கிறேன் என்று போட்டிபோட்டுக் கொண்டு வருவார்கள்" என்றான்.

"சரியான புருஷன் கிடைத்தால் மறுவிவாகம் செய்துகொள்ள எனக்கு யாதொரு ஆட்சேபனையுமில்லை" யென்றாள் பர்வதம்.

* * * *

அன்று சாயங்காலம் சுப்பராயன் நன்றாகத் தன்னையலங்காரம் செய்துகொண்டு, ஆறுமுகத்தை வெளியே உலாவ அழைத்தான். ஆறுமுகம் எப்பொழுதும் உலாவச் சென்றதில்லை. ஆயினும் சுப்பாராயன் கூப்பிடவும், அதற்கு வேறு என்னவேனும் காரணம் இருக்கும் என்று யூகித்து, அவனுடன் வெளிக்கிளம்பினான்.

சுப்பாராயன் ஆறுமுகத்தை இரண்டு மைலுக்கப்பால் இருந்த ஒரு ஓட்டலுக்கு அழைத்துச்சென்று, அவன் வயிறு நிறம்பச் சிற்றுண்டிகள் வாங்கிக் கொடுத்தான். பிறகு இருவரும் தங்கள் கிராமம் நோக்கிப் புறப்பட்டனர். வழியில் தான் ஆறுமுகத்தைத் தனியே அழைத்து வந்ததன் காரணத்தைத் தெரிவிக்கவாரம்பித்தான்.

"என்ன ஆறுமுகம், எனக்கு வீட்டில் இப்பொழுது இருக்கவே பிடிக்கவில்லை"

"ஏன்?"

"எத்தனை நாளைக்குத்தான் இவ்வளவு பெரிய வீட்டில் தன்னந்தனியாக இருப்பது? இராக்காலங்களில் ஒவ்வொரு சமயம் எனக்குப் பயமாகவும் இருக்கிறது"

"வீட்டில் யாரையாவது குடித்தனம் வைக்கிறது தானே?"

"குடித்தனத்திற்கு யார் வருகிறார்கள்? அப்படி வந்தா

(29-ம் பக்கம் பார்க்க)




அமிர்தா

சிறந்த வகையில்

இரத்த சுத்தி

அளித்து

நரம்புக்கு

வலுவூட்டுகிறது

இரத்தமின்மை
அஜீரணம்
சருமக் கோளாறு
இந்திரிய ஸ்கலிதம்
நரம்பு பலவீனம்
இரத்தி நோய்கள்
முதலியவற்றை
நிவர்த்திக்கும்

கேஸரி குடீரம்
மதராஸ்.

**தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!**

புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து
ஆனந்தமடையுங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | கவிதைகள் (8-பாகங்கள்) | ரூ. 2—8—0 |
| 2. | வசனங்கள் (6-பாகங்கள்) | ,, 2—0—0 |
| 3. | கதைக்கொத்து | ,, 0—8—0 |
| 4. | பகவத் கீதை | ,, 0—8—0 |
| 5. | கட்டுரைகள் பகுதி 1 தத்துவம் | ,, 0—10—0 |
| | ,, ,, 2 மாதர் | ,, 0—8—0 |
| | ,, ,, 3 கலைகள் | ,, 0—8—0 |
| | ,, ,, 4 சமூகம் | ,, 0—12—0 |

**6. Bharathi and his works**
by Mr. C. Visvanathan, Brother of Bharathi 0 4 0

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.




10 வருஷம் உத்திரவாத முள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு)

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்த மடையலாம்.

(கேட்லாக் இலவசம்)

**R. S. பிரகாசம் & Co,**

அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்,
187, சைனு பஜார் ரோட், ஜி டி
மதறாஸ்

சிறுவர் பகுதி

# பிச்சைக்காரி

—:—

(ஸ்ரீமான் பி. ஏ. லக்ஷ்மண முதலியார்)

கார்த்திகை மாதத்தொருநாள் இரவு மழை விடாது பொழிந்து கொண்டிருந்தது. கடந்த ஒரு வாரமாகவே மழை அதிகமாகப் பெய்து வந்ததால் எளியவர்கள் தங்கள் குடிசைக்கும், வேலை கிடைக்காததால் உண்ண உணவிற்கும் பெரிதும் வாடித் தவித்தனர்.

மேற்கண்ட இரவில் சாவிப்பட்டி கிராமத்தில் ஓர் நடுவயதுடைய பிச்சைக்காரி வீடு வீடாகப் புகுந்து பிச்சை கேட்டாள். அவளுடைய கந்தலான உடை முற்றும் நனைந்து இருந்தது. மழை ஜலம் உடலிலிருந்து பெருவாரியாக வழிந்தது. அவள் முகமும் பசியால் மிகவும் வாடிக் களைத்திருந்தது. அவள் எத்தனையோ வீடுகளில் புகுந்தும் ஒரு கவளம் அன்னமும் கிடைக்கவில்லை. "இன்



னும் சமையல் ஆகவில்லை" என்றார் சிலர்; "சாப்பிட்டாயிற்று, போ" என்றார் பலர்; "வேறு இடம் பார்" என்றார் ஒரு சிலர்; "வீட்டில் உடையவர் இல்லை" என்றனர் வேறு சிலர்; "இந்த மழையிலுமா பிச்சைக்கார் தொந்திரவு!" என்று வெருட்டினவர் வெகுபேர்.

கடைசியாக ஓர் எளிய வீட்டின் கதவு திறக்கப்பட்டது. வீட்டுக்காரி பிச்சைக்காரிக்குச் சிறிது அன்னம் உதவினாள். பிச்சைக்காரி உடலிலிருந்து மழைநீர் வழிவதையும், அவள் தேகம் குளிரால் நடுங்குவதையும் காண வீட்டுக்காரிக்கு மனம் இளகிற்று.

"ஐயோ பாவம்! உன் உடல் எப்படிக் குளிரால் நடுங்குகிறது!" என்று அவள் மொழிந்துகொண்டே வீட்டினுள் விரைந்து சென்று ஓர் ஆடையை எடுத்து வந்து பிச்சைக்காரிக்குக் கொடுத்து, "நீ



உன் நனைந்த ஆடையை மாற்றிக்கொள். நான் இன்னும் சிறிது சுடு ஆகாரம் தருகிறேன். வேறு இடத்திற்குப் போய் இன்னும் நனையாமல் இத்திண்ணையிலேயே படுத்துக்கொள்" என்று உபசரித்தாள்.

அன்னமிட்ட வீட்டுக்காரியின் நிலையோ மிகப் பரிதாபம். சென்ற நான்கு நாட்களாக வேலையொன்றும் கிடைக்காததால் அவளும் அவள் மக்களும் வயிறு நிரம்பச் சோறுண்டு நாட்கள் நாலாயின. இந்த நிலையில் பிச்சைக்காரிக்கு ஆகாரம் உதவியதால் எளிய தாய்க்கும் அவள் மக்களுக்கும் அரை வயிற்றிற்கே உணவிருந்தது. ஆயினும் பிச்சைக்காரிக்த சற்றுவது பசியைத் தணிக்கவே கடவுள் தனக்கு அன்று வேலையைக் காட்டினார் என்று அவள் பன்முறையும் துதித்தாள். இத்தகைய எளியோர் இன்னும் எத்தனைபேர் இத்தருணம் பசியால் தவிக்கின்றனரோ என்று அங்கலாய்த்துக் கண்ணீர் உதிர்த்தாள் அத்தர்மிஷ்டி.

மறுநாட் காலை, பிச்சைக்காரி சென்ற வீட்டிற்கெல்லாம் சாவிப்பட்டி கிராமத்துப் பெரிய சீமாட்டியிடமிருந்து விருந்துக்கு அழைப்பு வந்தது. என்றும் இல்லாமல் பெரிய சீமாட்டி இன்று விருந்து செய்வதும், அதற்குத் தங்களைப் போலொத்த எளியோருக்கும் அழைப்பு வந்ததும் எல்லோருக்கும் வியப்பைத் தந்தது. ஆகையால் எல்லோரும் நான் முன்னே நீ முன்னே என்று அடித்து விழுந்து கொண்டு சீமாட்டியின் வீடடைந்தனர்.

விருந்தினர் யாவரும் சாப்பிடும்கூடத்தை அடைந்தபோது அவர்கள் வியப்பை என்னென்பது! பெரிய சீமாட்டியின் வீட்டில் அவர்கள் அறுசுவையோடுங் கூடிய விருந்தை எதிர்பார்த்தனர். அதற்கு மாறாக இலைகளில் கேழ்வரகு களிமட்டும் வைக்கப்



பட்டிருந்தது! கூடத்தின் நடுவில் ஓர் பெரிய இலையில் மட்டும் இனிய பதார்த்தங்களும், பழவர்க்கங்களும், பாயசமும், அதிரசமும் படைக்கப்பட்டிருந்தன.

அப்போது பெரிய சீமாட்டி விருந்தினர்களை நோக்கிப் பேசலானாள்.

"நேற்றிரவு உங்கள் வீடுகளில் பிச்சைக்கு வந்தவள் நான்தான். குடிக்கக் கூழும் தங்க நிழலும் இல்லாமல் எளியவர்கள் தவிக்கும், இக்காலத்தில் அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய புண்ணியவதிகள் நம் கிராமத்தில் உண்டா என்று அறியவே நான் அப்படிச் செய்தேன். இந்தப் புண்ணியவதி ஒருத்தியட்டும் ஏழை படும் துயரத்தை நன்கு உணர்ந்தவள். அவள் எளியவளே ஆயினும் தன்னுடைய ஆகாரத்திற் பாதியை எனக்குக் கொடுத்ததுமன்றி தன்னுடைய ஒரே மாற்றுத் துணியையும் எனக்குக் கொடுத்துதவினாள். அவளுடைய தர்ம சிந்தனையையும் உதார குணத்தையும் என்னென்பது? ஆகையால் இந்த அம்மாள் மட்டும் அறுசுவையோடுங் கூடிய இந்த அன்னத்தைப் புசிக்கட்டும். இதுமட்டுமல்ல. அவள் ஆயுள் முழுதும் அவள் குடும்பச் செலவிற்கு வேண்டிய பொருளை நானே கொடுத்துவரத் தீர்மானித்திருக்கிறேன். ஆனால் உங்கள் எல்லோருக்கும் மற்ற இலைகளிலிருக்கும் எளிய உணவே அதிகம். உங்கள் ஈரமிலா நெஞ்சுக்கேற்ற உணவு இதுதான். நீங்கள் இவ்வுலகில் செய்யும் தர்மத்திற்கேற்றபடியே உங்களுக்கு மறுவுலகில் நடக்கும் என்பதை ஞாபகப்படுத்த இது ஒரு நல்ல பாடமாக இருக்கட்டும்."

"வெறும்பானை பொங்குமோ மேல்?"


## நரையை ஒழியுங்கள்!

இந்த ஆயிலால் தலைநரை ஒழிந்துவிடும். வேரிலிருந்தே கூந்தல் கருமை பெறும்; 60-வயது வரை அப்படியே இருக்கும். பலனில்லையேல் 2 மடங்கு கிரயம் வாபீஸ். சொற்ப நரைக்கு ரூபா 3-க்கும், கால்பங்கு நரைக்கு ரூபா 5-க்கும் பாதிக்கு மேலோ அல்லது பூராவுமோ விழுந்தால் ரூபா 9-க்கும் ஆயில் வாங்குக.

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படவேண்டும்.

BALA KALA STORES,
P. O. Kanni Siuri (Darbhanga.)

பார்! **D. R. புதிய மோஸ்தர்கள்** சாம்பில் பாருங்கள்

இனி, மோஹினி, இந்திராணி, சுந்தர பார்டர், ஒரு பூனை, ஒரு பெங்களூர் தலைப்பு, தர்மாவரம் (மைசூர் பட்டு) புடவைகள் உபயோகியுங்கள். உத்தியோகஸ்தர்களுக்கு மாதிரி புஸ்தகம் உசிதம்.

ஆங்கிலத்தில் எழுதவும் : D. R. NARAYANASWAMY & SONS, Dharmavaram :: (Anantapur Dt.)

## இந்திய வர்த்தமானம்

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

மென்டார் தீர்மானித்திருக்கின்றனர். இவ்விரு பிரதேசங்களின் வடக்கு தெற்கு எல்லைகளில் கடலோரக் காப்பாளரைக் கொண்டும் படகுகளைக் கொண்டும் விசேஷக் காவல் ஏற்பாடு செய்யப்படும் இந்தக் நடைமுறைகளைப்பற்றிய ஏற்பாடு உப்பள வருமான இலாகா கலெக்டரால் கவனிக்கப்படும்.

* * *

### பிச்சைக்காரிக்கு இறந்தபின் ஏற்பட்ட கௌரவம்

ஒரு பிச்சைக்காரிக்கு அவளது 65 வருஷ வாழ்வில் கேரிடாத கௌரவம் அவள் மரணத்தினலேற்பட்ட விவரம் கல்கத்தாவில் ஒரு மோட்டார் விபத்து சம்பந்தமான வழக்கில் அடிஷனல் சிப் பிரசிடென்ஸி மாஜிஸ்டிரேட் ராவ் பகதூர் மைத்ரா முன் எடுத்துரைக்கப்பட்டது.

மோட்டார் விபத்தின் காரணமாகப் பிரக்ஞையற்று இந்தப் பிச்சைக்காரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார். அங்கு அவள் கல்கத்தா அட்வொகேட் ஒருவருடைய காணமற்போன உறவினள் எனக் கருதப்பட்டாள். அவள் மரணமடைந்த பின்னர், பெரிய குடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரிக்குண்டான கவுரவமும் மரணச் சடங்கும் இவளுக்கு அட்வொகேட் உறவினரால் நடத்தப்பட்டன.

நவம்பர் 19-ந்தேதி அப்பர் ஸர்க்குலர் ரஸ்தாவில் அடையாளம் தெரியாத ஒரு ஸ்திரீ ஒரு மோட்டார் காரால் மோதப்பட்டுக்காயத்துடன்போலீஸாரால் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். பங்குராவிலிருந்து விட்டர்பூர் வந்த ஒரு கண்ணிய குடும்ப ஸ்திரீயைக் காணவில்லையெனக் கல்கத்தா அட்வொகேட்டால் போலீசுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் அட்வொகேட்டின் உறவினர் (ஸ்திரீகளுள்பட) இந்த ஆஸ்பத்திரிக்குவந்து அங்கு இறந்த ஸ்திரீ தாங்கள் தேடும் நித்யமாயி தாஸியெனக் கூறினர். இருவர் தோற்றமும் அவ்வளவு ஒன்ருகவிருந்திருக்கிறது. பிரேத விசாரணை நடந்த பின்னர் அந்தப் பிரேதம் பெரிய ஊர்வலத்துடன் எடுத்துச் செல்லப்பட்டுத் தனவந்த குடும்ப ஸ்திரீக்குரியவாறு மரணச் சடங்குகளும் விசேஷமாக நடத்தப்பட்டன. சிரார்த்தமும் நடத்தப்பட்டது. பிறகு காணமற்போன ஸ்திரீயைப்பற்றிய தகவல் ஹௌரா போலீசுக்குக் கிடைத்தது.

மோட்டார் விபத்திற்காக டிரைவர்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது; இதில் இறந்துபோன ஸ்திரீ நித்யமாயி தாஸி அல்லவென்றும் அடையாளம் தெரியாத ஒரு வளென்றும் குற்றப்பத்திரிகையை மாற்றவேண்டுமென்றும் பப்ளிக் பிராஸிகூடர் கேட்டுக்கொண்டார். இதற்கு மாஜிஸ்டிரேட் காரணம் கேட்டபொழுது இந்தக் கதை வெளியிடப்பட்டது.

* * * *

### பொதுவுடமைச் சதி

சமீபத்தில் சுமார் 30 யுவர்களும், யுவதிகளும் கைது செய்யப்பட்டதைக் கொண்டும், ஏராளமான பிரசுரங்கள் கைப்பற்றப்பட்டதைக் கொண்டும், ஒரு பெரிய பொதுவுடமைச் சதி நடந்து வருவதாகக் கல்கத்தா போலீசார் நம்புகின்றனர். பாமர மக்களிடையில் பொதுவுடமையைப்பற்றிப் போதிப்பதும், பொதுவுடமைக் கொள்கைகளை விதைப்பதும் அவர்களது நோக்கமெனச் சொல்ல படுகிறது. சதிகாரர்கள் கல்கத்தா எல்லைக்குள் மட்டும் பிரசாரம் செய்வதுமல்லாமல், கிராமாந்திரங்களிலும் அவர்களுடைய பிரசாரம் பரவியிருப்பதற்குத் தகுந்த சாட்சியமிருப்பதாகக் கூறப்படுகிறது சந்தேகாஸ்பதமான புள்ளிகளையெல்லாம் எதிரிகளைக்கொண்டு கூடிய சிக்கிரம் ஒரு சதி வழக்குத் தொடுக்கப்படுமென்று தெரிய வருகிறது.

* * * *

### தேசீய பாஷையில்லாமல் தேசீய வாழ்க்கை சாத்தியமில்லை

நாசிக் ஹிந்திப் பிரசார சங்கத்தின் முதலாவது வருஷாந்திரக் கூட்டத்தில் ஸ்ரீசங்கராசாரியாரான டாக்டர் குர்த்கோடி பின்வருமாறு பேசினார்:—

தேசிய பாஷையில்லாவிட்டால் தேசீய வாழ்க்கை என்பது சாத்தியமில்லை. ஹிந்துஸ்தானி ஹிந்துஸ்தானத்தின் பாஷையாக இருக்கப்பெற்றிருக்கும் உரிமையைப் பகுத்தறிவுள்ளவர்கள் எவரும் எதிர்க்கமாட்டார்கள். ஹிந்தி பரவுவதால் இஸ்லாமிய கலாஞானமும் நாகரீகமும் நசுக்கப்படுமென நினைப்பது பெரிய தவருகும். ஹிந்து முஸ்லீம்கள் ஒருவருக்கொருவர் பிறர் நிலையை நன்கு தெரிந்துகொள்ளக் கூடிய காலம் சிக்கிரம் வரும் இச்சங்கம் அடைந்துள்ள வெற்றிபற்றித் திருப்தியடைகின்றேன்.

* * * *

### "வேறிடத்திற்கு மாற்றுங்கள்"

சுபாஷ் பாபு கல்கத்தாவிலுள்ள தமது நண்பர் ஒருவருக்கெழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிருர்:— எனது தேகநிலை சீர்பெறவில்லை எனது சரீர எடை மேன்மேலும் அதிகமாகக் குறைந்து வருகிறது. இந்த ஊர் சீதோஷ்ண ஸ்திதி என் சரீரத்துக்கு ஒத்துக்கொள்ளுவதாக எனக்குத் தோன்றவில்லை. இதனுல் வேறிடத்திற்கு மாற்றும்படிச் சிறிது காலத்திற்கு முன் சர்க்காருக்குக் கடிதம் எழுதினேன். ஆனல் அதற்கு இதுகாறும் அவர்களிடமிருந்து பதில் வரவில்லை.

* * * *


## மார்பு ரணத்தைப் போக்குங்கள்



மார்பு வலி, காசம் முதலியவைகளால் கஷ்டப்பட்டால் பெப்ஸ் உட்கொள்ளுங்கள். வாயில் போட்டுக் கரைசையில் இக் கிருமிநாச, சுவாச நிவாரண மாத்திரைகள் சிறந்த ஆவியை வெளியிடுகின்றன; இவை சுவாசாசயத்தினுள் ஊடுருவிச் செல்கின்றன. பெப்ஸ் கபத்தை அறுத்து, சமனமூட்டுகிறது பரிக்கைக்குப் பக்கத்தில் பெப்ஸ் வைத்திருங்கள். பெப்ஸ் கைக்கடக்கமான



புட்டிகளில் புட்டி 1-க்கு ரூ. 1 வீதம் கிடைக்கும்.

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

பெப்ஸ் கிருமிநாச சுவாச நிவாரணி மாத்திரைகளை உட்கொள்க

# பெப்ச் PEPS



## வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணு. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம், திருத்தணி, S. இந்தியா.



## சுகுணவதி

ஓர் இனிய தமிழ் நாவல், அழகிய படங்கள்; எளிய நடை; ஆண்டிக் பேப்பர். விலை ரூபா ஒன்றே.

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.



குணமில்லையேல் ரூ. 100 இனும்

## யானைக்கால்

விரைவாதம், முடக்குவாயு, ஷைஜுரம் முதலிய வாயு ஸம்பந்தமான வியாதிகள் 20 நாளில் குணம் ரூ. 5. குணமானவர்களின் புகைப்பட நற்சாக்ஷி பத்திர கேட்லாக் வேண்டுவோர் 1 அணுஸ்டாம்புடன் எழுதவும்.

யானைக்கால் வைத்தியசாலை, 53 பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.



## பத்மராஜு

இனிய துப்பறியும் தமிழ் நாவல்.

ஸ்ரீமதி பத்மாஸனி எழுதியது

இதில் புத்தி சாதுர்யமாய், அதிகக் கேட்டை விளைக்கும் கொடிய சூழ்ச்சிகளும், அதனல் நிரபராதிகள் படுந்துயரமும், துப்பறிவோர் அதி சாமர்த்தியமும், திடுக்கிடும் சம்பவங்களும் பொதிந்து விளங்குகின்றன. பொருமையால் வருங்கேடு இறுதியில் வெளியாகின்றது. டிம்மி 286 பக்கங்கள்.


விலை ரூ. 1—8.

'மித்திரன்' ரயில்வே புத்தகசாலைகளிலெல்லாம் கிடைக்கும்.

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.



## HAVE A SOUND SLEEP



By using our Indian-made Mosquito curtains, highly approved by persons of every rank for their strong netting, durability and beautiful finishing.

PRICES.

| | | Ordinary. | Superior. | Best |
|---|---|---|---|---|
| 6' x 3½' x 3½' | Re. | 1- 0 | 1- 4 | 1- 8 each |
| 6' x 4' x 4' | " | 1- 4 | 1- 8 | 1-12 " |
| 6½' x 4½' x 4½' | " | 1- 8 | 1-12 | 2- 0 " |
| 7' x 5' x 5' | " | 1-12 | 2- 0 | 2- 4 " |
| 7½' x 6' x 6' | " | 2- 0 | 2- 4 | 2- 8 " |

Purchaser of three will get one curtain 6' x 4' x 4' free. Packing Free. POSTAGE EXTRA.

PRABHAT TRADING CO., 12, Sikderpara Lane, Barabazar, CALCUTTA.

மஹாபாரதம் : அநுசாஸன பர்வம்



சமீபத்தில் அபிஸீனியா கவர்னரான ஜெனரல் கிரேஸியானி அபிஸீனியத் தலைவர்களுக்கு ஒரு பிரசங்கம் செய்தார்.

# ஊழ்வினையும் மனிதன் முயற்சியும்

## கருடன் கதை

பீஷ்மர் "தெய்வம், முயற்சி இரண்டினுள் எது சிறந்தது?" என்றவிஷயத்தில் வஸிஷ்டருக்கும் பிரம்மாவுக்கும் நடந்த ஒரு சம்பாஷணையை யுதிஷ்டிரருக்குச் சொன்னார்.

வஸிஷ்டர், 'ஊழ்வினை, மனிதன் முயற்சி இரண்டினுள் எது சிறந்தது?' என்று கேட்கப் பிரம்மா பின்வருமாறு சொன்னார்:—வித்திலிருந்து முளை, இலை, காம்பு, கிளை, மலர், கனி, வித்து முதலியவை உண்டாகின்றன. ஆகையால் வித்திலிருந்து வித்து உண்டாகிறது. விதையைவிதைப்பவன் எவ்வகையான விதையை விதைக்கிறானோ அவ்விதமான பலனை அடைவதுபோல நல்வினைக்கும் தீவினைக்கும் தக்க பலனை மனிதன் அடைகிறான். நிலமில்லாமல் விதைக்கப்பட்டவிதைபயன்படாதது போல முயற்சியில்லாத ஊழ்வினை பயன்படுவதில்லை. செய்வினை பூமியாகவும் ஊழ்வினை விதையாகவும் கூறப்படுகின்றன.

செய்ததும் செய்யாததும் உலகத்தில் பிரத்யக்ஷமாகக் காணப்படுகின்றன. நல்வினையினால் இன்பமும் தீவினையினால் துன்பமும் உண்டாகின்றன. முயற்சிசெய்யாதவனுக்கு அதிருஷ்டத்தினால் வருவது ஒன்றுமில்லை. ஸ்வர்க்கமும் காமலக்ஷ்மும் தான் விரும்பின ஐஸ்வர்யமும் இங்கே செய்த முயற்சியினால் அடையப்படுகின்றன. நக்ஷத்திரங்களும், தேவர்களும், நாகர்களும், யக்ஷர்களும், சந்திரன், சூர்யன், வாயு இவர்களனைவரும் மனிதர்களாயிருந்து முயற்சியினால் தேவத் தன்மையை அடைந்தார்கள். செல்வம், நண்பர்கள், ராஜ்யம், குலம், தேஜஸ் முதலியவை கர்மம் செய்யாதவர்களுக்கு அனுபவிக்கக் கிடைக்காதவை. பிராம்மணன் தூய்மையினாலும், க்ஷத்திரியன் பராக்கிரமத்தினாலும், வைஸ்யன் விடாமுயற்சியினாலும், சூத்ரன் பணிவிடையினாலும் ஐஸ்வர்யத்தை அடைகின்றனர்.

தம்தம் செய்கைக்குப் பயனில்லாமல் போமாயின் உலகம் தெய்வத்தையே எதிர்பார்த்துக்கொண்டு ஒன்றும் செய்யாமலிருந்துவிடும். அப்போது எல்லாம் வீணாய்ப்போம். மானிடர் செய்யும் முயற்சியைச் செய்யாமல் தெய்வத்தையே நம்பியிருப்பவன் ஆண்மையில்லாத கணவனை அடைந்த பெண்போல வீணாக வருத்தப்படுகிறான். புண்யபாவங்களுக்குத் தேவலோகத்தில் சீக்கிரமாகப் பயனுண்டாவதுபோல மானிட லோகத்தில் உண்டாவதில்லை. செய்யப்படும் முயற்சியானது தெய்வத்தை அனுசரித்தே இருக்கிறது. முயற்சியில்லாதபோது தெய்வமானது யாருக்கும் எதையும் கொடுக்கமாட்டாது. வழி தப்பி நடப்பவனைத் தெய்வம் தடுப்பதில்லை. குருவைச் சிஷன் அனுஸரிப்பதுபோல மனிதன் செய்த சிறந்த தர்மத்தைத் தெய்வம் அனுஸரிக்கிறது. எப்போதும் முயற்சிதான் பலனுள்ளதென்று உண்மையாகக் கண்டறிந்து விடாமுயற்சியினால் தெய்வத்தைத் தூக்கிவிட்டு விதியும் வினையும், சேர்வதனால் ஸ்வர்க்கத்தின் வழியை அடையலாம்.

### கருடன் கதை

பிறகு பீஷ்மர் கருடன் கதையைப் பின்வருமாறு சொன்னார்:—தக்ஷப் பிரஜாபதிக்கு கத்ரு, விநதை என்ற இரண்டு பெண்கள் இருந்தனர். மரீசியின் குமாரரான கஸ்யபர் அவ்விருவரையும் மணந்துகொண்டார். சிலகாலம் கழித்து அவ்விருவருக்கும் கஸ்யபர் வரமளிப்பதாகச் சொன்னார். கத்ருவானவள் எல்லோரும் ஒரே சக்தியும், ஒரே மஹிமையுமுள்ள ஆயிரம் பிள்ளைகள் ஏககாலத்தில் பிறக்கவேண்டுமென்று கேட்டாள். விநதை, வேகத்திலும், பராக்கிரமத்திலும் கத்ருவின் பிள்ளைகள் ஆயிரவருக்கும் ஒப்பான வீரர்களான இரண்டு பிள்ளைகளைக் கேட்டாள். அவ்விதமே கஸ்யபரும் வரம் கொடுத்தார். ஐந்நூறு வருஷங்களுக்குப் பிறகு கத்ருவின் பிள்ளைகளான ஸர்ப்பங்கள் பிறந்தனர். தனக்கு இன்னும் புத்திரன் பிறக்கவில்லையாகையாலும் கத்ருவிற்குப் பிறந்துவிட்டபடியாலும் விநதை ஒரு முட்டையை உடைத்தாள். அப்பொழுது அரைக்குமேல் வலிய சரீரமுள்ளவனும் கீழ்ப்பாகமில்லாதவனுமாக முட்டையினின்று சிறகில்லாமல் வெளிப்பட்ட சிறந்த தைர்யசாலியான ஒரு புத்திரனை அவள் கண்டாள். புத்ரனும் தாயைப் பார்த்து, "நீ என் விஷயத்தில் அவசரப்பட்டாய்; நீ கோபத்தினாலும் பொறுமையினாலும் என்னை இவ்வாறு செய்துவிட்டாய். ஆதலால் நீ அடிமையாவாய். ஐந்நூறு வருஷகாலமாக எவளுடன் கூடக் கலகப்படுகின்றாயோ அவளுக்கே தாதியாவாய். என் இளைய சகோதரன் உன்னை அடிமைத் தன்மையிலிருந்து விடுவிப்பான்" என்று கூறினான். பிறகு ஐந்நூறு வருஷங்கள் கழித்து கருடன் பிறந்தான்.

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் சகோதரிகள் இருவரும் கடலோரம் சென்றனர். அங்கே உச்சைஸ்ரவம் என்ற குதிரையைப் பார்த்தனர். கத்ரு விநதையைப் பார்த்து அதன் நிறம் என்ன


**வெண்குஷ்டம் பெருவியாதி**

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக,

**KAMALA WORKS (S. M.)**
Panchpota—Bengal, India.



Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

**ஹோமியோ புத்தகங்கள்**

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

**M. BHATTACHARYYA & Co.,**
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

வென்று கேட்டாள். விநதை வெண்மையென்று கூறவும் மற்ெருரு நிறம் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறி அதற்காகக் கத்ரு பந்தயம் வைத்தாள். யார் சொல்வது நிஜமாக விருக்கிறதோ அவருக்கு மற்றவர் அடிமையாக விருக்க வேண்டுமென்பது இந்தப் பந்தயம்.

பிறகு கத்ரு வீட்டுக்குச் சென்று தன் பிள்ளைகளான ஸர்ப்பங்களை அழைத்து தான் பந்தயம் வைத்ததைக் கூறி, அவர்களை உச்சைஸ்ரவஸ் என்ற குதிரையின் கருப்பு வால் மயிர்களாகும்படி சொன்னாள். அதற்கு அவளது பிள்ளைகள், வஞ்சமாக ஜெயிப்பது நன்மையாகாதென்றும், பாபத்தை விட்டு ஸரியான எண்ணத்துடனிருக்கும் யோக்யர்களான தங்களையும் பாபத்தில் சேர்க்க முயற்சிப்பதாயும், கர்வத்தினால் கார்யாகார்யங்களை அறியாமல் தப்புவழியில் போகும் குருவையும் விட்டுவிடும்படி சாஸ்திரம் விதிக்கிறதென்றும் சொன்னார்கள்.

அதற்குக் கத்ரு, புத்திரன் தாய் தந்தையரை இவ்வுலகத்திலும் வேறு உலகத்திலும் கரையேற்ற வேண்டியவனென்றும், அதில் புதுமை ஒன்றுமில்லை யென்றும் சொன்னாள். ஸர்ப்பங்கள் தாயின் சொல்லைக் கேட்டு ஒப்புக்கொண்டபோதிலும் சில மீறிச் சென்றன. இதைக்கண்ட கத்ரு கோபம் கொண்டு, அந்த ஓடின ஸர்ப்பங்களைப் பார்த்து, "பாண்டு வம்சத்தில் ஜனமேஜயன் பிறக்கப்போகிறான். அவ்வரசன் கோபித்துக்கொண்டு ஸர்ப்ப யாகம் செய்யப்போகிறான். அந்த யாகத்தில் உங்களை அக்னியினால் கொல்லப்போகிறான்" என்று சாபம் கொடுத்தாள். மற்ற ஸர்ப்பங்கள் அந்தக் குதிரையின் வால் மயிராக மாறின. மறுநாள் கத்ருவும் விநதையும் குதிரை இரண்டு நிறமாகவிருப்பதைக் கண்டார்கள். முன் வைத்த பந்தயப்படி விநதை கத்ருவுக்கு அடிமையானாள்.

இவ்வாறிருக்கையில் கருடன் மிகவும் கர்வமடைந்திருந்தான். ஒருநாள் நாரதர் கருடனைக் கண்டு அவனுடைய தாயின் வரலாற்றைச் சொல்லி அவளை விடுவிக்காமல் கர்வமடைவது பயனில்லை என்று சொன்னார். அதன்படியே கருடன் நேராகக் கத்ருவிடம் சென்று தன் தாயைத் தனக்காகவேனும் விடுவிக்கும்படி வேண்டிக் கொண்டார். ஆனால் கத்ரு இதைச் சிறிதும் கவனியாமல், 'அம்ருதம் கொண்டுவந்தால் விநதையை அடிமைத்தனத்திலிருந்து நீக்குவதாக'ச் சொன்னாள்.

இதைக் கேட்டுக்கொண்டு கருடன் தன் பிதாவிடம் சென்று நடந்ததைச் சொன்னான். அதற்குக் கஸ்யபர் இப்பொழுதுள்ள பலத்தைக் கொண்டு கருடன் அம்ருதம் கொண்டுவர முடியாதென்றும், அதிக பலம் வேண்டுமென்றும், பூர்வ ஜன்மத்தில் ஒருவரையொருவர் கொல்லக்கருதின மதுகைடபர்கள் ஓர் யானையும் ஆமையுமாக விருக்கின்றனரென்றும் அவர்களைக் கொன்று பக்ஷித்தால் அதிக பலம் வருமென்றும் பிறகு அம்ருதம் கொண்டுவர முடியுமென்றும் சொல்லி யானை, ஆமையைப்பற்றிய கதையையும், அவர்களைக் கொல்லும் விதத்தையும் பின்வருமாறு சொன்னார்:— உரகமென்னும் மலைக்கருகாமையில் கனகம் என்ற ஒரு மடு இருக்கிறது. அந்த மடுவில் ஆமையிருக்கிறது. யானை பிரதிதினம் இந்த மடுவிற்குச் சென்று தாக சாந்தி செய்துகொள்ளுகிறது. இவ்விரண்டிற்கும் பிரதிதினம் அங்கு யுத்தம் நடந்துவருகிறது. யானையானது யுத்தம் செய்யக் கருதிச் சற்றுநேரமிருக்கும்போது அந்த ஆமையும் யுத்தம் செய்ய விரும்பி தண்ணீரில் நின்று மேலேகிளம்பும். ஆமை வெளிக்கிளம்பியும் யானை அதன்மேல் கவனம் வைத்துமிருக்கையில் இரண்டையும் பிடிக்க வேண்டும். இதற்கு வேறு உபாயம் இல்லை.

பிதா சொன்னதைக் கேட்டுக் கொண்டு கருடனும் அதே மாதிரி யானையையும் ஆமையையும் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பினான். உடனே இரண்டும் உயிர் விட்டன. கருடனும் இரண்டையும் தின்றுவிட்டுத் தேவலோகம் சென்று அம்ருதத்தைக் கொண்டு வர முயற்சி செய்தார். அமிருதமானது அக்னியால் காக்கப்பட்டு வருவதைக்கண்டு பிரும்ம தேவரின் யோசனைப் படி வெண்ணெயை ஆஹுதி செய்து அடக்கி மற்றவர்களையும் ஜயித்து அம்ருதத்தை எடுத்துக்கொண்டு கத்ருவிடம் சென்றான்.

கத்ரு அம்ருதத்தைப் பார்த்தவுடன் விநதைக்குச் சுதந்திரமளித்து அனுப்பினாள். உடனே கருடனும் அம்ருதத்தை மறுபடியும் எடுத்துக் கொண்டு, கத்ருவின் பிள்ளைகளைக் கொல்லவேண்டுமென்னும் நிச்சயம் செய்து கொண்டும் ஆகாயத்தில் கிளம்பினார். இதைக் கண்டு கத்ரு கருடன் மோசம் செய்வதாகச் சொன்னாள். கருடனும் அவள் வஞ்சம்செய்து ஜயித்தாளென்றும், மேலும் அம்ருதம் கொண்டு வரும்படி மட்டும் சொன்னாளென்றும், அம்ருதத்தைக் கொடு என்று சொல்லவில்லை யென்றும் கூறிச் சென்றார். பிறகு அவர் அமிருதத்தை முன்போலவே தேவலோகத்திற்கு எடுத்துச் சென்று இந்திரனிடம் கொடுத்தார்.

(தொடரும்.)


அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார் ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)

டில்பஹார் ஸோப்பு சிறந்த சுத்திகரிப்பைத் தரும் கிருமி நாசினி.

சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.






உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

**The Anglo Indian Drug & Chemical Co**

**285, Jumma Musjid, BOMBAY 2.**

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி,

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி



போலிகளைக் கண்டு உஷார்!!!




அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும்
இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம்
லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா.



இரங்கோன் கலர் சிந்தடிக்கற்கள் மணிமாலைகள்




இந்தியாவில் எல்லா பாகங்களிலும் ஏராளமாய் விரும்பக்கூடிய தற்கால நாகரீகத்துக்கேற்றவாறு கெமிகல் கோல்டினால் புதுமாதிரியாய் தயார் செய்தவை. இதை ஸ்திரீகள் குழந்தைகள் நேர்த்தியாய் அணிந்து கொள்ளலாம்.

25'' நீளமுள்ள கலர் கல்மாலை 1க்கு ரூ. 4-0-0
டை பெண்டன்டு போட்டது 1க்கு ,, 5-0-0
ஜாலர் ஒட்டியாணம் பெரியது 1க்கு ,, 6-8-0
நெ.1. சாதா கெஜ்ஜைஒட்டியாணம் 1க்கு 5-8.
நெ. 2. 1க்கு 3-8-0 நெ. 3. 1-க்கு 2-8-0
கைவளையல்கள் பெரிய சைஸ் ஜதை 1-க்கு 2-8-0. கெமிகல் கோல்ட் ரங்கோன் டைமண்டு 14 கற்கள் உள்ள கம்மல் ஜதை 1க்கு 6-0-0. எல்லாவற்றிற்கும் 5 வருஷம் உத்தரவாதம். F. M. S. ஆர்டருக்கு முன் பணம் அனுப்பவும்.

கே. நாதமுனி & சன்ஸ்,
(ஸ்தாபிதம் 1910.)
168, சைனா பஜார் ரோட், மதராஸ்.

## தென்னிந்தியப் பிரமுகர்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

னம் செய்துள்ளனர்'' என எழுதியது.

### சமூகச் சீர்திருத்தம்

ராவ்பஹதூர் சபாபதி முதலியார் சமூகச் சீர்திருத்தத்தில அபிலாஷையுள்ளவராக விருந்தபோதிலும், மதானுஷ்டானத்தில் அக்கரை கொண்டவர்; இவருக்கு மதப்பற்று விசேஷமாக உண்டு. இவர் தமது இருப்பிடத்தில், "சன்மார்க்க சமாஜம்'' என்ற சங்கத்தை ஆரம்பித்து அதைப் பலவகையிலும் காப்பாற்றி வந்தார். எல்லாத் தொகுதியும், எல்லா ஜாதிகளும் முன்னேற்றமடைய வேண்டுமென்பதுதான் இந்த சமாஜத்தின் அடிப்படையான நோக்கம். சகோதரத்வத்தை இது போதிக்கின்றது. ஒரு சம்ஸ்கிருதப் பள்ளிக்கூடத்தையும் இவர் இந்த சமாஜத்திற்காக நடத்தி வந்தார்; சிறுவர்களுக்கு நற்புத்தி புகட்டும் உபந்யாஸங்களுக்கும் இவர் ஏற்பாடு செய்து வந்தார். மதப்பிரசாரம் செய்வதற்கு இவர் அனுகூலங்கள் அளித்து வந்தார்; பெரியவர்களுக்கு இலவச இராப்பள்ளிக்கூடங்களையும் இவர் ஏற்பாடு செய்தார்; ஒரு இலவச சங்கித போதன பள்ளிக்கூடத்தையும் இவர் நிறுவினார்; வாரப் பத்திரிகை ஒன்றையும் ஆரம்பித்தார் கடைசியாக ஒரு புத்தகாலயத்தையும் இவர் ஸ்தாபித்தார். மொஹரம் பண்டிகையும், தசரா பண்டிகையும் ஏககாலத்தில் மூன்று வருஷங்களாக வந்தபோது (சுமார் 1889-ல்) ஜனங்களுக்கும் அதிகாரிகளுக்கும் பெருத்த பீதி உண்டு. இவ்விரண்டு பண்டிகைகள் காரணமாக ஹிந்து-முஸ்லீம்களுக்குள் கலவரம் ஏற்படலாம் என்று பலரும் பயந்தனர். இக்காலத்தில் அப்பிரதேசத்திய மாஜிஸ்திரேட்டுகள் இவரது ஆலோசனையை நாடி அதற்கேற்ப நடந்து வந்தனர். ஆகையினால் அந்த ஜில்லாவில் சச்சரவு சிறிதும் ஏற்படாமல், எல்லாம் அமைதியுடன் நிறைவேறின.

### விவசாயிகளுக்கு உதவி

இங்கிலாந்து, ஸ்வீடன் தேசங்களிலிருந்து இவர் சுமார் 4000 உழவு ஏர்களை வரவழைத்து, அவற்றை ஸீடட் ஜில்லாக்களில் வாங்கிய விலைக்கு விற்று வந்தார். இது ஏனெனில் அங்குள்ள ஜில்லாக்களில் உபயோகிக்கப்பட்டு வந்த கிராம்மிய ஏர்கள் இவருக்கு திருப்திகரமாகவில்லை; அவர்களுடைய லாபத்தையே கருதி, இவர் இந்த இரும்பு ஏர்களை அவர்களுக்கு விற்று, அவர்களது சௌகர்யத்தை அபிவிருத்தி செய்தார். இவர் இவ்வாறு 1879-ம் வருஷம் முதல் 1895-ம் வருஷம் வரையில் செய்து வந்தார். அநேகம் ரயத்துக்கள் இதனால் அதிக வசதிகளைச் சம்பாதித்துக் கொண்டனர். பின்பு ஒரு சமயம் சென்னை கவர்னர் ஆம்ப்தில் பிரபு, பெல்லாரியில் பேசுகையில் ரயத்துக்களுக்குப் புதிய முறைகளைச் சொல்லிக்கொடுத்து அவற்றை விஸ்தரிக்கச் செய்த பெருமை அந்நகரவாசிகளில் பிரதானமானவருடையதாகும் என்று சொன்னார், தார்வாரில் இவர் ஒரு புதிய கம்பனியை "நார்'' தயார் செய்வதற்காக ஆரம்பித்தார்.

### அரசாங்கத்தார் அடிக்கடி ஆலோசனை கேட்பது

ராவ்பஹதூர் சபாபதி முதலியாரை அரசாங்கத்தார் அடிக்கடி ஆலோசனைகள் கேட்டு வந்தனர். ஸர். வி. பாஷ்யமய்யங்கார் சென்னை சட்டசபையில் "ஹிந்து வித்யாதான லாப மசோதா'' வைக் கொண்டு வந்தபோது, அநேகம் முக்கியஸ்தர்களின் அபிப்பிராயங்கள் வேண்டப்பட்டன. இச்சமயம் இவர் இந்த மசோதா திருப்திகரமானதல்லவென்று தெரிவித்தார். 1891-ல் சென்னையில் "ஹிந்து தேவாலய தர்மஸ்தாபனங்களின் மசோதா''வை இவரது அபிப்பிராயத்திற்காக கவர்ன்மெண்டார் அனுப்பிய போது இவர் இம்மசோதா மிகவும் அவசியமென்றும், தேவாலய நிர்வாகத்தைப பற்றி முக்கியமான விதிகள் வேண்டுமென்றும் எழுதியனுப்பினார். நிர்வாகக் கமிட்டி மெம்பர்களின் நியமனத்தைப் பற்றிச் சில விஷயங்களில் இவர் தமது அபிப்பிராய பேதத்தைத் தெரிவித்தார். இதே வருஷம் வைஸ்ராய் சட்டசபையில் "சம்போக வயது நிர்ணய மசோதா'' கொண்டு வரப்பட, சென்னையிலிருந்து கனம் மீர் ஹுமாயூன்ஜா, ஸர் முத்துஸாமி அய்யர், ஸர் சுப்பிரமணிய அய்யர், ஸர் வி. பாஷ்யமய்யங்கார், திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸராகவய்யங்கார, ராவ்பஹதூர் சபாபதி முதலியார் ஆகிய வெகு சொற்ப நபர்களின் ஆலோசனை வேண்டப்பட்டது. பிரேரேபிக்கப்படும் மசோதா தமக்குத் திருப்திகாமாகவிருப்பதாக இவர் தெரிவித்தார். இவ்வாறு அநேக சந்தர்ப்பங்களில் இவரது வார்த்தைகள் மதிக்கப்பட்டன.

1888-ல் சென்னைக் கவர்னர் கன்னிமோரா பிரபு, விவசாய இலாகா, விவசாயக் கல்லூரி ஆகியவற்றின் வேலைகளைப் பற்றி விசாரித்து அவைகளின் அபிவிருத்திக்குகந்த வழிகளை எடுத்துக் காட்டுவதற்காகவும் ஒரு கமிட்டியை நியமித்தார். இந்தக் கமிட்டியில் இவர் மிஸ்டர் டபிள்யு வில்ஸன், ராஜா ஸர் டி. மாதவராவ், கனம் பி.


நீலகிரி

# காப்பிக்கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜும் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்குத் தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானாலும் அனுப்பப்படும்:—

— வி. பி. ரெயில்வே பார்சல் மூலமாய் —

10 lb எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக்கோட்டை ரூபா 5—2—0

கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train)

1 × 30 lb மூட்டை நீலகிரி "O'' சைஸ் ,, 14—4—0

1 × 30 lb மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு ,, 12-11—0

இன்னும் இதர காப்பிப்பொடி டீ தினுசுகளின் விலை விவரங்களுக்கு :: :: கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :: ::

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்.,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்

T ஸ்டேன்ஸ் & Co, Ltd., கோயம்புத்தூர்.

BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW




வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளை தான உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய வீல்களும் இருக்கிறதாகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள். செந்தூரத்தில் "மான்மார்க்''செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்

Sole Agents:-M. R. V. AIYER & Co., 49, பந்தர் தெரு, மதராஸ்

"ஜனனை க்ரீம்''

அற்புதமான சாஸ்திரீகசரக்கு; அநாவசியமாகக் கருதப்படும் ரோமங்களை நீக்க உயர்குடும்பங்களில் கனவான்களாலும், சீமாட்டிகளாலும், சினிமா நடிகைகளாலும் உபயோகிக்கப்படுவது. பரீட்சித்துப் பாருங்கள்.

கிடைக்குமிடம்:—

SHIVLAL & CO.,
Princess Street, Bombay 2.




# குழந்தைகளின் வயிற்று ஜுரக் கட்டிகளை

சந்தேகமின்றி சமனப்படுத்துவது

# பால சஞ்சீவினி

இதுவேதான்

உண்மையான அசல் விஜயநகரம் மருந்து

விஜயநகர சமஸ்தான வைத்திய பரம்பரை பின்னா குடும்பத்தாரால் தயார் செய்யப்பட்டது

Dr. பின்னா பாபய்யா பாத்ருடு ப்ரதர், விஜயநகரம்.

மதராஸ் பிராஞ்சு: 98-99, பிராடுவ்ஸ் ரோட், மைலாப்பூர்.

(ராமகிருஷ்ண மடம் எதிர்.

செஞ்சல்ராவ், மிஸ்டர் ஜே. க்ரோஸ், மிஸ்டர் (பின்பு ஸர்) எப். ஏ. நிக்கல்ஸன், மிஸ்டர் ஜே. ஆடம் என்பவர்களுடன் ஸ்தானம் வஹித்தார். இக்கமிட்டியார் சில மாதகாலம் உழைத்து வெளியிட்ட ரிபோர்ட்டு மிகவும் சிலாக்கியமானது. கவர்ன்மெண்டாரும் 1890-ல் இவர்களது சேவையைச் சிலாகித்து, ஒரு உத்திரவைப் பிறப்பித்தனர்; தவிரவும் இவர்களது ஆலோசனைகளை சமயம் வாய்த்த போதெல்லாம் பயன்படுத்திக்கொண்டு வரலாயினர். பள்ளிக்கூடச் சம்பளத்திட்டத்தைத் திருத்துவதற்காக நியமிக்கப்பட்ட "கல்விக் கமிட்டி"யிலும் இவர் அங்கத்தினராகவிருந்தார்.

### "ஹிந்து" பத்திரிகைக்கு உதவி

1884-ல் சென்னையில் மஹாஜன சபை ஸ்தாபிக்கப்பட்டபோது இவர் அதில் அங்கத்தினராகச் சேர்ந்துகொண்டார். இச்சபை நிர்வாகக் கமிட்டியிலும் இவர் பெல்லாரி ஜில்லாப் பிரதிநிதியாக ஸ்தானம் வஹித்தார். இந்தச்சபையின் ஆதரவின்கீழ்நடைபெற்ற வார்ஷிக மஹாநாடுகளில் இவர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு வந்தார். பல வருஷங்கள் இவர் இச்சபையின் உப அக்கிராஸனர்களுள் ஒருவராகவும் இருந்து வந்தார். இவர் இச்சபைக்கு ஏராளமான உதவி புரிந்து வந்தார். சுமார் 1878-ல் "ஹிந்து" பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது இவர் அப்பத்திரிகைக்கு விசேஷ உதவியளிக்கலானர்; பின்பு பல வருஷங்கள்வரையில் இவர் அப்பத்திரிகைக்கு ஏராளமான திரவிய ஸஹாயம் செய்து, அதைக் காப்பாற்றி வந்தார். ஆரம்பத்தில் இவருடைய உதவி இருந்திராவிட்டால் அப்பத்திரிகையின் எதிர்கால வாழ்விற்குப் பெருந்த விபரீதங்கள் விளைந்திருக்கக்கூடும்

### காங்கிரஸின் பக்தர்

ஏற்கெனவே தேசியவாதியான இவர் காங்கிரஸ் மஹாசபை ஆரம்பிக்கப்பட்ட பின். அதன் பக்தர்களுள் ஒருவராகச் சோபிக்கவாரம்பித்தார். இவர் பம்பாயில் நடைபெற்ற முதலாவது காங்கிரஸ் மஹா சபைக் கூட்டத்திற்குச் சென்று வந்தார். பிரதி வருஷமும் இவர் காங்கிரஸ் மஹாசபைக்கூட்டத்திற்குத் தவருமல் சென்று வந்தார். 1887-ல் மூன்ருவது காங்கிரஸ் கூட்டத்தில் காங்கிரஸின் வேலைத்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக அகில இந்தியப் பிரமுகர்கள் சிலர் அடங்கிய கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது. அச்சபையில் இவரும் அங்கத்தினராக எடுத்துக்கொள்ளப்பட்டார். இதே காங்கிரஸில் இவர் ஆயுதச்சட்டத்தை எதிர்த்து, அச்சட்டம் அமுலிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று பேசினர். இதர தேசத்தினர் ஆயுதங்களை வைத்துக்கொள்ளும்போது இந்நாட்டினர்களுக்கு அவற்றை வைத்துக்கொள்ள அனுமதியில்லாதிருப்பது, ஒரு பெரிய அவமானம் என்றும், இதனால் குடியானவர்கள் முதலியோர் கொடிய விலங்குகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்வதும் இயலாது போகின்றது எனவும் இவர் பேசினர். இத்தீர்மானம் நிறைவேறியது. சிறிது காலத்திற்கெல்லாம் அரசாங்கத்தார் இச்சட்டத்தையும் எடுத்துவிட்டனர். காங்கிரஸ் விதி நிர்ணயக் கமிட்டியில்ஒருவராகவும் இவர் எடுத்துக் கொள்ளப்பட்டார். 1894-ல் பத்தாவது காங்கிரஸில் ஸர் டின்ஷா. இ. வாச்சா பருத்தி சாமான்களுக்கு விதிக்கப்படும் வரியையும், இந்தியாவின் க்ஷேமத்தைப் பாராட்டாமல் லங்காஷயர் வியாபாரிகளின் லாபத்தைக்கருதுவதையும், இந்தியாவின் இளம் தொழிற்சாலைக்கு ஏற்படும் நஷ்டத்தையும் கண்டித்து ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தார். அதை இவர் முழுமனதுடன் ஆமோதித்து அரிய பிரசங்கம் செய்தார். இதில் இவர் இத்தேசத்திய மக்களுக்கு அதிக சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்றும் சொன்னர். இதே வருஷம வைஸ்ராய் எல்ஜின் பிரபுவை காங்கிரஸ் சார்பில் பேட்டி காணும் தூதுகோஷ்டியில் ஒருவராகவும் இவர் பொறுக்கியெடுக்கப்பட்டார். காங்கிரஸில் இவர் தமது அந்திய காலம் வரையில் குன்ருத ஆர்வம் கொண்டிருந்தார்.

1893-ல் வடதொகுதி முனிசிபாலிடிகளின் சார்பாக இவர் சென்னை சட்டசபை மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாறு சீர்திருத்தப்பட்ட சென்னை சட்டசபையில் முதன் முதல் ஸ்தானம் வஹித்த ஜனப்பிரதிநிதிகளுள் இவரும் ஒருவராவார். சுமார் ஆறு வருஷகாலம் இவர் ஸ்தானம் வஹித்தார். சட்டசபை மசோதாக்களைப் பற்றின அநேகம் பொறுக்குக் கமிட்டிகளில் இவர் ஒருவராகவிருந்தார். சட்டசபை விவாதங்களிலும் விஷயாலோசனைகளிலும் இவர் முக்கியப் பங்கு எடுத்துக்கொண்டுவந்தார். சமயம் சம்பவிக்கும்போதெல்லாம் இவர் அரசாங்கத்தாரின் அநீதிகளைக் கண்டித்து அவற்றை எடுத்துக் காட்டிவந்தார். ஆகையினால் அரசாங்கத்தாருக்கு இவரிடம் பயமும் சிறிது இருந்து வந்தது. கர்நூல் காட்டு வழக்குகளைப் பற்றியும், மலையாள "ஏ" ஒப்பந்த முறையைப் பற்றியும், மழையின்மையால் பயிர்கள் வாடிய பிரதேசங்களில் வரி வஜா செய்யப்படவேண்டும் என்றும் இவர் சட்ட சபையில் அரசாங்கத்தாரை அநேக கேள்விகள் கேட்டார். ஆகவே இவை ஒவ்வொன்றும் பொதுஜன க்ஷேமார்த்தமாகக் கருதப்பட்டு வந்ததில் ஆச்சரியம் இல்லை! இவரது பிரசங்கங்களும் மிகச் சிறந்தவை.

### மதுவிலக்குப் பிரசாரம்

மதுவிலக்குப் பிரசார சம்பந்தமாகவும் இவர் மிகவும் உழைத்தவர். பார்லிமெண்டு மெம்பராகவிருந்த மிஸ்டர் கெயின் என்பாருடன் இவர் இவ்விஷயமாக மிகவும் ஈடுபட்டார். 1889-ல் அலகாபாத்தில் நடந்த 4-வது காங்கிரஸில் மதுவிலக்கு போதிக்கப்பட்டது. உடனே இவர் தமதூருக்குத் திரும்பியதும் கர்நூல், அநந்தபூர், பெல்லாரி ஜில்லாக்களில் அப்காரி சாராயம் கள்ளு ஆகியவற்றிற்கு விற்பனைக்காகத் தாம எடுத்துக்கொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்து, தமக்குக் கிட்டக்கூடிய விசேஷ வருமானத்தை உதறித் தள்ளிவிட்டார். மதுவிலக்குப் பிரசார சபையின் தலைவராகவும் இவர் இருந்தார். முஸ்லீம்களும் இவ்வாறு ஒரு சங்கத்தை ஆரம்பிக்க இவர் ஏற்பாடுகள் செய்தார். இந்தப் பிரசார சம்பந்தமாக பெல்லாரி ஜில்லா கலெக்டர் மிஸ்டர் லப்பான் என்பவருக்கும் இவருக்கும் தகராறுகள் ஏற்பட்டன. இறுதியில் இவரே வெற்றி பெற்ருர். கவர்ன்மெண்டாரும் இவர் பக்கமாக ஒரு நீண்ட உத்திரவைப் பிறப்பித்து. பத்திரிகைகளுக்கும் அனுப்பினர்.

தமது அந்திய வருஷங்களில் இவர் சில நஷ்டங்களுக்கு இரையாகி, பொது வாழ்வின முன்னணியினின்றும் சிறிது விலகிக் கொண்டார். ஆனல் இவர் வாழ்க்கையில் நஷ்டங்கள் மூலம் இவ்வாறு ஏற்படும் இடையூறுகளுக்குச் சிறிதும் அஞ்சாமல், தமது புத்தி கூர்மையின் மஹிமையினல் புதிய மார்க்கங்களைக் கண்டு பிடித்து அவை மூலம் பழையபடி பிரகாசிப்பதற்குச் சிரமப்பட்டு வந்தார். ராவ் பஹதூர் சபாபதி முதலியார் சென்னையில் ராயப்பேட்டையில், 1903-ம் வருஷம் அக்டோபர் மாதம் 29-ந்தேதியன்று தமது 65-வது பிராயத்தில காலமானர். இவரது மரணத்தினல் இத்தேசம் ஒரு பிரமுகரை இழந்தது. இம்மாகாணம் பல துறைகளிலும் மக்களின் க்ஷேமாபிவிருத்திக்காகவும், தேசத்தின் உயர்விற்காகவும் எக்காலமும் உழைத்து வந்த உத்தம புத்திரனை இழந்தது. வாழ்க்கையில் உயர்ந்த லக்ஷியங்களைக் கொண்டு அவற்றை இவர்போல் அனுசரித்து வந்தவர்களை நாம் அடிக்கடி காணுவது இயலாது!


நஞ்சன்கூடுபல்பொடி
டப்பி) I. D. L. №61. மெடிகேட்ட் (அணு 4

ஜீரசிப்
அஜீர்ண பித்த சமனி

வைடன்ஸால்
வீர்யவிருத்திக்கும் சுகநித்திரைக்கும்

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்
லிவர்க்யூர்
குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு
நிகரற்றது என்று டாக்டர்களாலும்,
பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.
அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது
ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மஸி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்

# இந்திய தேத் தண்ணீரால்



## தேக ஆரோக்கியத்தையும் களங்கமற்ற மனதையும் காப்பாற்றுங்கள்

நாமெல்லோரும் நமது இஷ்டப்படி ஏதாவது ஒரு மகத்தான சக்தியை ஆராதிக்கின்றோம். ஏனென்றால், அவ்விதம் செய்வது நாம் சத்தியம் தவறாது இருக்கவும், நல்வழி நடத்தவும் உதவுகின்றது.

இவ்விதமே மூளைச் சக்தியாலும், தேக சக்தியாலும் வேலை செய்யவும், அனைவருக்கும் தங்களது ஜீவ சக்தியை போஷிக்க இந்தியத் தேயிலை உதவுகின்றது.

எப்படி ஒரு மஹத்தான சக்தியை ஆராதிக்கும்பொழுது மெய் மறந்து போகிறோமோ அதே மாதிரி இந்திய தேத் தண்ணீரை அருந்தியவுடன் மனக்கவலையும், தேகக் களைப்பும் மறைந்து விடுகின்றன.



### தேத் தண்ணீர் செய்யு முறை

சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூனும் நல்ல இந்தியதேயிலையை போட்டுகொதிக்கும் ஜலத்தை விடு. 5 நிமிஷம் கழித்துவடிக் கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும்.

**இந்தியாவின் சந்தோஷமும், பெருமையும் - இந்திய தேயிலை**

IK. 42.

Regd. No. 2514

# மேக நோய்

• • •

இதை வெட்டை என்றும், மேக வெட்டை என்றும் சொல்லுவதுண்டு. சிலர் இதை வெறும் ஜலதோஷம் போல் ரொம்பவும் சாமானியமாக பாவித்து, இலேசாகவும், அலட்சியமாகவும் கருதுகிறார்கள். அது சுத்தத் தவறு.

**வெட்டை** ரொம்பவும் பயங்கரமான நோய்; ஆபத்து மிகுந்தது; உடலை ஒடுக்கி ஒடுக்கி, உயிரைப் பறிப்பது; இதை ஒழிக்கக் காலா காலத்தில் வழியும், வகையும் தேடாவிட்டால் இது ஆளை வாட்டி, வதைத்துக் கடைசியில் பிராணனுக்கே ஆபத்து நேரிடச் செய்யும். நோயாளி, துரதிர்ஷ்ட வசமாக கலியாணமானவராக விருந்தால் அவரது மனைவியும், குழந்தைகளும் கூட இந்நோய்க்கு இரையாகின்றனர்.

**வெட்டை** நோயால் நீங்கள் வருந்துகிறீர்களா? அப்படியானால் உடனே பூரண நிவர்த்தி பெற முந்துங்கள். நோய் ஆரம்ப தசையிலிருந்தாலும் சரி, அல்லது முற்றியிருந்தாலும் சரி, துளி கூட பயப்பட வேண்டாம்.

# கொபெய்சான்

இருக்கிறது; வெட்டை சம்பந்தமான எல்லா நோய்களுக்கும் கைகண்ட ஔஷதம். மற்றவை நிவர்த்தியளிக்கத் தவறலாம்; ஆனால் கொபெய்சான் தவறவே தவறாது.

**கொபெய்சானை** 4 முதல் 6 வாரங்களுக்கு சாப்பிடுங்கள். வியாதி துப்புற ஒழிந்து போகும். பத்தியம் எதுவுமில்லை. ஆனால் சூடான பதார்த்தங்களும், மதுபானமும் கூடாது.

**கொபெய்சான்** இரண்டு அளவுகளில் எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும். 15 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூ. 1; 50 மாத்திரைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 3. பாக்கிங் & தபால் செலவு தனி. பூரா விவரங்களடங்கிய துண்டுப் பிரசுரம் கீழ்கண்டவர்களிடம் கிடைக்கும்.

• • •

மொத்த ஏஜண்டுகள்:

## சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி,

12, மன்றோ தெரு :: பார்க் டவுன் :: மதராஸ்.

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press, Mount Road Madras—*Editor* C. R. Srinivasan, B. A.